Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/105)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 10 திங்கட்கிழமை (26.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 86













# மாகாண சபைகளின் அதிகாரம் பகிரப்படவேண்டியது அவசியம்

## ஆணைக்குழு அறிக்கையை வரவேற்கிறது இந்தியா

(புதுடில்லி)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வரவேற்றுள்ள இந்திய அரசு, இலங்கை அரசாங்கம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது குறித்து உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் என்று நம்புவதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. போருக்கு பின்னர் ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையை அளித்தபிறகு இந்தியா முதல் முறையாக தனது கருத்தை தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நல்லிணக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளபடி மனித உரிமை மீறல்கள் குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நம்பகத் தன்மை வாய்ந்த சுயாதீனமான விசாரணை நடைபெறவேண்டும். அப்படியான விசாரணை ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் இடம்பெற வேண்டும். பல தசாபதங்களாக நடைபெற்ற போரின் காயங்களை ஆற வைக்கும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்மூலம் நீடித்திருக்கக் கூடிய சமாதானத்தை ஏற்படுத்த ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இது தொடர்பில், காணாமற் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் குறித்த விபரங்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பிலான தகவல்கள், மும்மொழி (15 ஆம் பக்கம் பார்க்க)

## பெறுபேறுகள் வெளியாகின

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பெறுபேறுகள் நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சைத்திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணைய முகவரியில் இதனைப் பார்வையிடலாம்.

மாணவர்கள் தமது பெறுபேறுகளைப பார்வையிடுவதற்காகப் பாடசாலைகளிலும் இணைய நிலையங்களிலும் நேற்று மாலைவரை காத்திருந்தும் பெறுபேறுகள் வெளியாகாததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளை உரிய நேரத்தில் வெளியிட அதிகாரிகளுக்கு முடியாது போயுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் நேற்று குற்றம் சாட்டியுள்ளது.

இதன் காரணமாக மாணவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# ஊடகவியலாளர்கள் துரோகிகள் பொன்சேகா அறிவித்ததாக விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும், முன்னாள் பொலிஸ் மா அதிபரும் ஊடகவியலளார்களை துரோகிகளாக அறிவித்தனர் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமரட்ன ஆகியோர் ஊடகவியலாளர்களைத் துரோகிகளாக அறிவித்தனர் என அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு தகவல் அனுப்பி வைத்துள்ளனர்.

குறிப்பாக இலங்கையின் ஊடகவயலாளர்கள் விடுதலைப் புலிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு சேவையாற்றி வருவதாக குற்றம சுமத்தியுள்ளனர்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இராணுவத் தளபதியும், பொலிஸ் மா அதிபரும் இந்தக் கடுமையான குற்றச்சாட்டை சுமத்தியிருந்தனர். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# அனர்த்தக்குழுவின் குற்றச்சாட்டை மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

சர்வதேச அனர்த்தக்குழுவின் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.


யுத்தம் நிறைவடைந்த போதிலும் வடக்கு, கிழக்கில் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை, பெண்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என சர்வதேச அனர்த்தக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிபடையற்றவை பெண்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டால் அது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட வேண்டுமென இராணுவப் பேச்சாளர் நிஹால் ஹப்புவாரச்சி தெரிவித்துள்ளார்.

முறைப்பாடு செய்யப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். எனினும், பெண்களுக்கு பாதுகாப்பு கிடையாது என்ற கருத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என மேலும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# உள்ளூர் வாசிகள் தாக்குதல் உல்லாசப் பயணி மரணம்

## தங்காலையில் சம்பவம்




நீர்கொழும்பை அண்டியுள்ள தங்காலை கடற்கரை ஓரம் உள்ள உல்லாசப் பயணிகள் விடுதி ஒன்றில் உள்ளூர்வாசிகளின் தாக்குதலில் வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரின் மனைவியான விக்ரோரியா அலெக்ஸ்ஷாந்துவானா என்ற ரஷ்யப் பெண்மணி படுகாயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பிரித்தானியாவைச் (15 ஆம் புக்கம் பார்க்க)

# மதிய உணவு கொண்டுசென்ற சிறுவனைக் காணவில்லை

## தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சகோதரிக்கு மதிய உணவு கொண்டுசென்ற தனது 13 வயது மகனைக் காணவில்லையென தாயார் யாழ். பொலிஸ் நிலையதகில் முறைப்பாடு செய்துள்ளார்.



யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் தரம் - 7 இல் கல்விபயிலும வண்ணார்பண்ணை முருக மூர்த்தி வீதியைச் சேர்ந்த சிறி குமரவேல் ரத்னாஸ் (வயது -13) என்ற சிறுவனே நேற்று நண்பகல் முதல் காணாமல் போயுள்ளதாக முறைபயிடப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவில் கடமையாற்றும

(15 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடனான பேச்சுவார்த்தை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

## என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நடத்திவரும் பேச்சுவார்த்தை தொடருமென கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அரசுடன் நடத்தப்பட்டுவரும் பேச்சுக்களைக் கூட்டமைப்புத் தொடர்ந்தும் நடத்தும் அதேவேளை எதிர்கால பேச்சுவார்த்தைகளுக்கான திகதிகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை காணி, பொலிஸ் அதிகாரங்களைத்தர மாட்டோம் என கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையில் அரசதரப்பு குழு ஒன்றும் சொல்லவில்லை வெறும் அமைச்சர்கள் கூறுவதைப் பொருட்படுத்தத் தேவையில்லை. கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை நேர விரயமாகும் என்ற கெஹலியவின் கருத்துக்குப் பதிலளிக்கப்போவதில்லை. இந்திய ஆட்சி முறைமையை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பிழையாக விளங்கிக்கொண்டுள்ளார். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்த கெஹலியவின் மதிப்பீடும் தவறானது. அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்பதனை மட்டுமே தற்போதைக்குத் தெரிவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு, கிழக்கு மீள் இணைப்பு கட்சியின் முடிவு விரைவில்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பது தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாடு விரைவில் வெளியிடப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைத்தல் மற்றும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குதல் போன்றன தொடர்பில் கட்சியின் நிறைவேற்றுக் குழு தீர்மானிக்க உள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில்லை மற்றும் வடக்கு, கிழக்கை மீள இணைப்பதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் இந்தத் தீர்மானங்களுக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

# மண்ணில் வாழ வழி தெரியாது 29 ஆயிரம் விதவைகள் தவிப்பு

## யாழ். அரச அதிபர் கவலை

(யாழ்ப்பாணம்)

கோடி கோடியாக பணம் கொடுத்து கோயில்கள் கட்டும் இந்த மண்ணில் 29 ஆயிரம் விதவைகள் வாழ வழி தெரியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள். 350 வரையான சட்டவரை முறைக்குட்படாத பிள்ளைகள் பிறந்துள்ளன.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் கடந்த 23 ஆம் திகதி ஊழியர் நலன் புரிச் சங்கத்தால் நடத்தப்பட்ட ஒளிவிழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விபசாரிகள் வருகைப் பட்டியல் நீண்டுசெல்கிறது. 6 பிள்ளைகளைப் பெற்ற விதவைத் தாய் தீ மூட்டி தற்கொலை செய்துள்ளார். வன்னி யுத்தத்தில் சிக்கி சீரழிந்த தாய் ஒருவர் வடமராட்சியில் தன் தாயாரின் நிலத்தில் குடியிருக்க வந்தபோது அவருக்கு வீட்டுத் திட்டம் வழங்க அப்பிரதேச கிராம அலுவலர் மறுத்துள்ளார். பிரதேச செயலர் சாக்குப் போக்குச் சொல்லி நாட்களை கடத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் என்னிடம் வருகிறார்கள். முறையிடுகிறார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்துடன் இணைந்து வாழவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. அதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது. ஆனால் எமது அதிகாரிகள் அவற்றுக்கு இடையூறாக நிற்கிறார்கள்.

மக்களின் அவல வாழ்வைச் சொல்லி வயிற்றுப் பிழைப்பு நடத்துபவர்களும், விமர்சனம் செய்து பிரசாரம் செய்பவர்களும் இந்த நிலைமைகளை மாற்றியமைக்க முன்வரவேண்டும் என்றார். (120)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இராணுவத்தினரால் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினரால் பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வெள்ளத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு மற்றும் உணவல்லாத பொருட்களை இராணுவத்தினர் கட்டம்கட்டமாக வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளையும் இராணுவத்தினர் புனரமைத்து வழங்கி வருவதுடன், வெள்ளப் பாதிப்பு இடம்பெற்ற பகுதிகளை துப்புரவாக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (உ-கே)

# வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 240 பேருக்கு இந்திய வீட்டுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் 240 பேர் இந்திய அரசின் வீடமைப்பு உதவித் திட்டத்தினைப் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இப்பிரிவுக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்து வன்னிப் பகுதியில் வசித்து தற்போது மீள் குடியேறிய குடும்பங்களிலிருந்தே இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வீட்டின் பகுதியளவிலான திருத்தத்திற்கென 208 வீடுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இத்தெரிவுகளில் கணி சமானவை ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் அமைப்பாளரும், முன்னாள் பிரதேச சபைத் தலைவரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமாகிய வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ஆலோசனையுடன் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (54)

# நல்லிணக்கத்தின் மூலமே சமாதானத்தை ஏற்படுத்தலாம்



மன்னார் மறை மாவட்ட ஆயர்

(மன்னார்)

நாட்டை ஆள்பவர்கள் நல்லிணக்கத்திற்கு வருவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இதற்காக நாம் அனைவரும் பிறந்திருக்கும் இயேசு பாலகனைப் பிரார்த்திக்க வேண்டும் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நத்தார் தின நள்ளிரவு திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# வீட்டில் நுழைந்த திருடனால் கைத்தொலைபேசி அபகரிப்பு

(திருநெல்வேலி)

தனிமையிலிருந்த இளம் பெண்ணொருவரின் வீட்டுக்குள் நுழைந்த திருடன் அங்கிருந்த கைத்தொலைபேசியை திருடிச் சென்றுள்ளான். நேற்றுப் பகல் வேளையில் கல்வியங்காடு பருத்தித்துறை வீதி இலங்கை நாயகி அம்மன் கோவிலடியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த இளம் பெண் அருகாமையிலுள்ள கடைக்குச் சென்றுவிட்டு மீண்டும் திரும்பி வந்தபோது திருடன் வீட்டுக்குள் இருந்து வெளியேறி வந்துள்ளான். இளம் பெண்ணின் கூக்குரலைக் கேட்டு அயலவர்கள் வந்து சேர்வதற்கு முன்னதாக திருடன் துவிச்சக்கர வண்டியில் தப்பிச் சென்றுள்ளான். (137)

# சட்டவிரோத மின்சாரம்; ஆட்சேபனை மனு நிராகரிப்பு

சட்டவிரோத மின்சாரம் பெற்றதாக 3 பேர் மீது குற்றம் சாட்டி யாழ். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், எதிரி தரப்பினரால் எழுப்பப்பட்ட ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்குகள் சட்டத்துக்கு முரணான முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிரிகள் தரப்பில் ஏற்கனவே ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை மின்சார சபையினால் பொதுப் பாவனைகள் ஆணைக்குழுவின் எழுத்துமூலமான அனுமதி இல்லாமல் இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால் அவை சட்டப்படி செல்லுபடியற்றவை எனத் தெரிவித்து இவ்வழக்குகளை தள்ளுபடி செய்யுமாறு எதிரிகள் தரப்பில் கோரப்பட்டிருந்தது.

இதற்கான தீர்ப்பு கடந்த 22 ஆம் திகதி வழங்கப்பட்டது. யாழ். நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா சட்ட ஆட்சேபனையை ஆராய்ந்து இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த பின்னர் ஆட்சேபனையை நிராகரித்து தீர்ப்பளித்தார்.

எதிர்வரும் தை மாதம் 3, 4 ஆம் திகதிகளில் மீண்டும் விசாரணை நடைபெறும் என நீதவான் உத்தரவிட்டார். (137)

# கருங்கல் பிள்ளையார் கரம்பகத்தில் திருட்டு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கரம்பகப் பிள்ளையார் ஆலயத்தில் கருங்கல் பிள்ளையார் விக்கிரகம் ஒன்று அண்மையில் பகல் வேளையில் விஷமிகளால் களவாடப்பட்டுள்ளது.

களவாடப்பட்ட சிலை இடைச்சுழிப் பிள்ளையார் சிலை எனவும் சிலையின் பாதத்தில் சிறு காயம் உள்ளதாகவும், இதனைக் கண்டவர்கள் ஆலய நிர்வாகத்தில் அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் நேற்று நண்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ரமேஸ் (வயது - 45) என்பவரே காயமடைந்தவராவார்.

உடனடியாக அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் காயமடைந்தவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததுடன் விசாரணைகளை மேற்கொண்டனர். படுகாயமடைந்த நபர் தனியார் வங்கியொன்றில் வேலை செய்பவராவார். (எப்.எஸ்)

# 9 ஆயிரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதி மாணவர்களுக்கு இராணுவத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, கரைச்சி ஆகிய கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கோட்ட பாடசாலை மாணவர்கள் அடங்கிய 9 ஆயிரத்து 35 பேருக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

57 ஆவது பிரிகேடியர் கொமாண்டர் ஆர்.ரி.றோபெல் மற்றும் கிளிநொச்சி பிராந்திய இராணுவத் தளபதி ஆகியோரின் ஏற்பாட்டில் சீருடைகள், பாதணிகள், புத்தகங்கள், கொப்பிகள், கொம்பாஸ் ஆகிய பொருட்கள் இராணுவ அதிகாரிகளால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. (உ-கே)

# சமுர்த்தி நிவாரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் டிசம்பர் மாதத்திற்குரிய சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.

சமுர்த்தி முத்திரை உள்ளவர்கள் நாளைய தினத்திற்குள் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (11)



நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்ற ஒளி விழா நிகழ்வின்போது, கொக்குவில் கல்வாரி பூரண சுவிசேஷ சபையினர் நத்தார் கீதம் இசைப்பதைக் காணலாம். (26)

# கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு பழைய வீதிப் பகுதியில் தனது வீட்டு கிணற்றில் தவறி வீழ்ந்தவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கலை ஞானவேல் என்.கே.தங்கவடிவேல் (வயது - 68) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் இளைப்பாறிய விலை மதிப்பு பரிசோதகரும், பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளரும், இலங்கை மக்கள் வங்கியின் மதிப்பீட்டாளருமாக கடமையாற்றியதுடன், தொழிற்சங்கவாதியாக செயற்பட்டுள்ளார்.

சடலம் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில ஒப்படைக்கப்பட்டுள்ளது. (135)

## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1141)

## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முனகூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

**மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு!**

- அகிடன் பிரபு -


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com


## நாம் எச்சரிக்கையோடு இருப்போம்!

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இதே நாளில்தான் இயற்கையீன் கடுஞ் சீற்றத்தை, திடீரென நாம் திகைத்துப் போகுமளவுக்குப் பிரமாண்டமாய்க் கண்டு வெலவெலத்தோம். நம் நாட்டில் மட்டுமல்ல, தெற்காசியாவின் கரையோரங்களையெல்லாம் தாக்கி, ஒரே நாளில் பல லட்சக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்துச் சென்றது ஆழிப்பேரலை.

கடலின் சுனாமிக் கோபத்தை நாம் நேரடியாகக் கண்டு ஏழு வருடங்கள் கடந்துவிட்டன. அதன்பிறகு சுனாமியின் தாக்குதலுக்கு அடிக்கடி இரையாகும் ஜப்பானில் இவ்வருடம் மார்ச் மாதத்தில் அதன் ஆக்ரோசத்தின் பேரளவை மறுபடி அறிந்தோம். இயற்கைக்கு முன்னே நாம் எவ்வளவு சிறிய மனிதர்கள் என்றுணர்ந்து பதறினோம். மனிதர்கள் உருவாக்கிய அனுஉலைகள் வெடித்து உலகில் கணிசமான பகுதி பாதிப்புக்குள்ளாகி விடுமோ என்று பயந்தோம்.

2004 இல் நம் நாட்டில் தாக்கிய சுனாமியிலும் இவ்வருடம் ஜப்பானில் தாக்கிய சுனாமியிலும் அலை எழுந்த உயரம் சுமார் 30 மீற்றர் வரை என்று கண்டிருக்கிறார்கள். 1958 இல் அமெரிக்காவிலுள்ள லித்துயா கடலில் உருவான சுனாமிதான் உலகிலேயே மிகப்பெரிய சுனாமி. இதன் அலை உயரம் 520 மீற்றர் வரை இருந்ததாம். நல்லவேளையாக இந்த சுனாமி தாக்கிய இடத்தில் அதிகம் மக்கள் வசிக்காததால் இரண்டு பேர் மாத்திரமே அதில் உயிரிழந்துள்ளனர்.

இயற்கை அவ்வப்போது பொங்கி, நம் உயிர்களின் பெறுமதி பற்றி நமக்கு இடித்துரைத்துச் செல்கிறது. சுனாமிக்குக் காரணமாக, பூமியின் அச்சுகள் நகர்கின்றன உள்ளே. நாம் இன்னும் பூமியின் மேலே எல்லைக்கோடுகளை வரைந்து கொள்வதிலேயே குறியாயிருக்கிறோம். இயற்கையின் அத்தனை அழிப்பு முயற்சிகளுக்கும் அப்பால், மனிதர்களாகிய நாம், நம்மை நாமே அழித்துக் கொண்டதுதானே அதிகம்!

எந்த சுனாமியிலிருந்தும் அழிவிலிருந்தும் நாம் பாடம் கற்றுக் கொள்ளவில்லை; கற்றுக்கொள்ள மறுத்தும் வருகிறோம். எத்தனை எத்தனையோ அற நீதிகள், அகிம்சா போதனைகளுக்கு மத்தியிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் கொலைகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும்போது, மனிதர்கள் நாம் வாழ்வதற்கல்ல, ஒருவரையொருவர் கொன்று கொள்வதற்கே காரணங்களைத் தேடி வருவதாகத் தென்படுகிறது.

நம் தரப்பை ஏற்காதவர்களைக் கொன்று, நாம் வாழ்வது என்கிற ஏற்பாடு அல்லது நமது தர்மத்துக்குப் புறம்பாக உள்ளவர்களை அழித்து நாம் ஜெயித்தல் என்பதுதான் இன்றைக்கும் நம்மிடமுள்ள 'வாழ்தல்' அறமாக இருக்கிறது. மொழி, இனம், தேசியம் போன்ற இன்னோரன்னவை அழிந்துவிடாமல் இருப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களை அழிக்க நாம் எப்போதும் தயார்.

வாழ்வு, சுதந்திரம், இன்பம் போன்றவற்றைக் கட்டியெழுப்ப அமெரிக்கர்களுக்குத் தேவைப்பட்டவை பழங்குடிகளாயிருந்த செவ்விந்தியர்களின் 75 மில்லியன் மண்டையோடுகளும், ஆபிரிக்க மக்களின் 15 மில்லியன் சங்கிலி பூட்டிய உடல்களும் என்பதை நாமறிவோம். இதுவே இன்னும் விரிவடைந்து உலக அமைதிக்கு உலக சுபிட்சத்திற்கு தேச விடுதலைக்கு என மேலும் பல மில்லியன் உயிர்களைக் காவு கொள்ளும் தாகமாகத் தொடர்கிறது.

மொழிக்காக, குலத்துக்காக, மதத்துக்காக, தேசியத்துக்காக என்று வரலாற்றில் அனேகம் போர்கள் நடந்து முடிந்திருக்கின்றன. இயற்கை அழிவுகள் தந்த உயிரிழப்புகளை விட இந்தப் போர்களும், மனிதர்களிடம் பொங்கும் விரோதமும் அழித்தவையே அதிகம். மனித இனம் அமைதியாகவும் சுபிட்சமாகவும் வாழும் வழியை இவைகள் தந்துவிடவில்லை.

ஹிட்லரின் வதைமுகாமில் மரணத்தின் விளிம்பு வரை சென்று உயிர் தப்பிய விக்டர் பிராங்கல் என்ற உளவியலாளர் பின்னர் எழுதினார்: "மனிதன் என்னவெல்லாம் செய்ய முடியுமென்பதை ஆஸ்விச் வதைமுகாம் மூலம் நாம் அறிந்திருக்கிறோம். இனி என்ன நடக்கக் காத்திருக்கிறது என்பதை ஹிரோஷிமா மூலம் நாம் அறிந்திருக்கிறோம். எனவே, நாம் எச்சரிக்கையோடு இருப்போம்."

ஆமாம், மனிதர்களாகிய நாம், மனிதர்கள் குறித்தே இன்னும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டியிருக்கும் கொடுமையை என்ன சொல்ல?

- ஆசிரியர் -

# அழிவை நோக்கிய பயணம் வேண்டாம் அபிவிருத்தியை நோக்கி அணிதிரளுங்கள்

## கோப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்

மீண்டும் ஒரு அழிவை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரும்புகின்றனர். என்று வலி. கிழக்கு கோப்பாய்ப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. கிழக்கு கோப்பாய்ப் பிரதேச அமைப்பாளருமான இராமநாதன் ஜங்கரன் தெரிவித்தார்.

அச்செழு ஒளிநிலா முன்பள்ளி மாணவர்களின், கலைவிழா மற்றும் பிரியாவிடை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இம் முன்பள்ளி மாணவர்களின் இன்றைய இந் நிகழ்வில் அவர்கள தங்களுடைய பேச்சுக்களாலும், கலை நிகழ்வுகளாலும் அனைவரையும் வரவழைத்து மகிழ்வதனைப் பார்க்கின்ற பொழுது நான் இன் நிகழ்விலே கலந்துகொண்ட தனையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைவதுடன், இதனை உருவாக்கி அவர்களை இவ்வளவு ஆற்றல் படுத்திய இம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாரட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

அச்செழு தனிப்பனையாடி வீதியினை பொருளாதார அமைச்சர் பசில்ராஜபக்ஷ அவர்களும், எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் இணைந்து புனரமைத் துள்ளனர். அதேபோன்று சென்ற வருட இம் முன்பள்ளி மாணவர்களின் கலைவிழாவில் கலந்து கொண்ட போது சனசமூக நிலைய நிர்வாகத்தினர் வைத்த கோரிக்கைக்கிணங்க அவர்களுடைய அச்செழு ஒளிநிலா வீதியினை 2012ஆம் ஆண்டு புனரமைக்க இருப்பதுடன், இவ் அரங்கத்திற்கான மின்சார வசதியினையும் மிக விரைவில் செய்து முடிப்பதுடன், உங்களுடைய தேவைகள் தொடர்பாக எமது அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா அவர்களுடன் கதைத்து நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களை திரும்பவும் முள்ளி வாய்க்காலுக்கு கொண்டு செல்வதற்காக நடைமுறைச் சாத்தியம் இல்லாத விடயங்களைப் பேசிக் கொண்டு இருப்பதுடன், கடந்த காலங்களில் கிடை த்த சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தி இருந் தால் இன்று நாம் எல்லோரும் எமது உறவுகளை யும், எமது உடமைகளையும் இழந்திருக்க மாட்டோம். இலங்கை, இந்தியா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த தவறியவர்கள் இன்று மக்களிற்கு உடனடியாக செய்யவேண்டிய தேவைகள் எவ்வளவோ எல்லாம் உள்ளபோதிலும் அவர்கள் அதனை எல்லாம் பேசாமல் தங்களிற்கு அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லை என்றும், பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இல்லை என்றும், தேவையில்லாத பிரச்சினைகளைப் பேசிக்கொண்டு காலத்தை இழுத்தடிக்கும் வேலைகளைச் செய்கின்றனர்.

ஆனால் எங்களுடைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவா கள் நடைமுறைச் சாத்தியமான விடயங்களைப் பேசி வருவதுடன், அதனை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். ஆகவே நிச்சயமாக உங்களுடைய எதிர்காலம் சிறப்பாகவும் மிகவும் சந்தோசமாகவும் அமையும் என்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய உண்மையற்ற கதைகளைக் கேட்டு நீங்கள் மீண்டும் அழிவுப பாதைக்கு செல்லாமல் எங்களுடைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிற்கு பின்னால் அணி திரளுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார். (135)

# 'மின்சாரக் கேற்றில்' உத்தரவாதம் மீறல்; வழக்குத் தொடர்கிறார் வாடிக்கையாளர்

(திருநெல்வேலி)

சுன்னாகத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றில் மின்சாரத்தில் இயங்கும் கேற்றில் ஒன்றைக் கொள்வனவு செய்த பாவனையாளர் ஒருவர் பின்னர் அது இயங்கவில்லை எனக் கூறி குறிப்பிட்ட நிலையத்திற்குத் திரும்ப வந்து அதனைத் திருத்தித் தருமாறு கேட்டபோது நிலையத்தினர் அதனைத் திருத்தித் தரவில்லை என புகார் தெரிவித்துள்ளார்.

ஒருவருட உத்தரவாதத்துடன் அக்கேற்றில் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கேற்றில் உரிய முறையில் இயங்கவில்லை ஆதலால் கேற்றிலை மீண்டும் பெற்றுக் கொண்டு அதற்குரிய பணத்தைத திருப்பித் தருமாறு குறிப்பிட்ட வர்த்தக நிலைலய உரிமையாளரிடம் அவர் கோரியுள்ளார்.

இது சம்பந்தமான முறைப்பாட்டை யாழ். நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடமும், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சிடம் அவர் முறையிட்டுள்ளார். நுகர்வோர் அதிகார சபைக்கு இது பற்றி விசாரணை மேற்கொள்ளுமாறு உள்நாட்டு வர்த்தக அமைச்சிடமிருந்து கடிதம அனுப்பப்பட்டுள்ளது. (137)

# கூட்டுறவு பயிற்சியை முடித்தவர்களுக்கு சங்கங்களில் வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து களப்பயிற்சியை நிறைவுசெய்த பயிற்சியாளர்களுக்கே கூட்டுறவு சங்கங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென யாழ். கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர இறுதிப்பரீட்சை 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி யுடன் முடிவடைகின்றது.

அதனைத் தொடர்ந்து இவர்களுக்கான இரு வார கால களப் பயிற்சிக்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு களப்பயிற்சி இடம்பெறும

கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கே கூட்டுறவுச் சங்கங்கள் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தெரிவித்தமைக்கு அமைவாக பயிற்சியை முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும அவர் மேலும் தெரிவித்தார்.(எஸ்)

# செப்பனிட்ட வீதியில் மீண்டும் பாரிய குழிகள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் - யாழ்ப்பாணம் வீதியில் பல பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதால் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இவ்வீதியில் ஓட்டுமடம் சந்திக்கும் சுற்றுவட்டச் சந்திக்கும் இடையில் இரண்டு பாரிய குழிகள் உள்ளன. அதேபோல் ஆறுகால் மடம் பகுதியிலும் இரண்டு பாரிய குழிகள் தோன்றியுள்ளன.

இதனைவிட ஆங்காங்கே பல் சிறிய குழிகள் ஏற்பட்டுள்ளன குழிகள் சமாந்தரமாக உள்ளதால் உயரம் குறைந்த சொகுசு வாகனங்கள் இவற்றினைத் தாண்டிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி செங்குத்தான இக்குழிகளால் இரவுநேரப் பயணங்களில் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இப்பாரிய குழிகளால் தாம் வாகனங்கள் செலுத்துவதில் பெரிதும் சிரமப்படுவதாகவும் தெரிவித்த சாரதி ஒருவர, சிறிய குழிகளாகத் தோனறும் போதே இதனைச் சீர் செய்திருக்க வேண்டும் என ஆதங்கம் வெளியிட்டார். கடந்த மாதமே இவ் வீதி மீள் செப்பனிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (54)

# வலி. வடக்கில் திருட்டு தாராளம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் தற்போது மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகளிலிருக்கும் பொருட்கள் திருடர்களால் களவாடப்பட்டு வருவதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் இரும்புகள் சேகரிப்பதற்கென நாளாந்தம் பலர் குழுக்களாக வாகனங்களிலும், தனியாகவும் வருகின்றனர். இவர்கள் இப் பகுதி யில் உள்ள ஆட்கள் இல்லாத இடங்களிலுள்ள இரும்பு உள்ளிட்ட பல பொருட்களை திருடிச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (54)

# யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இரண்டு உயர் பாதுகாப்பு சிகிச்சைப் பிரிவுகள் கடந்த திங்கட்கிழமை முதல் புதிதாக ஆரம் பிக்கப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையின் மூன்றாம் இலக்க நோயாளர் விடுதியின் முன்பாகவும், ஒன்பதாம் இலக்க விடுதியின் முன்பாகவும் இந்த உயர் பாதுகாப்பு சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்கள் அவசர மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த குறித்த உயர் பாதுகாப்பு சிகிச்சைப் பிரிவின் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டதின் பின்னரே நோயாளர் விடுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இச்சிகிச்சைப் பிரிவுகள் இண்டும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராசாவினால் திறந்து வைக்கப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

## டெங்கு ஒழிப்பு பிரசாரம்

(கரணவாய்)

கரணவாய்ப் பகுதிகளில் கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்கள் டெங்கு ஒழிப்புப் பிரசார நடவடிக்கைகளை அண்மையில் மேற்கொண்டனர்.

உத்தியோகத்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பகுதிகளிலுள்ள குடியிருப்பு வீடுகளுக்குச் சென்று டெங்கு பரவாமல் இருப்பதற்கு உரியவர்கள் தமது வீடுகளைச் சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தினர். அத்துடன் வீடுகளைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

இதில் சுத்தமில்லாது குப்பையாக இருக்கும் வீட்டு உரிமையாளரிடம் உடனடியாக வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தினர். (18)

## வறிய குடும்பங்களுக்கு மலகூடம் வலி தென்மேற்கில் புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வறிய குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைத்துக் கொடுக்கும் விசேட திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக இப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட 320 குடும்பங்கள் மலசல கூடம் அமைப்பதற்கான உதவிகள் பெறுவதற்கு தகுதியானவர்கள் எனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இருபத்தெட்டு கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து இப்பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சமுர்த்தி உதவி பெறுவோர், வறிய குடும்பங்களைச் சேர்ந்தோரிலிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ் உதவிகள் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் அமைபபாளரும், மானிப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா)வின் முயற்சியினால் பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஊடாக மேற்படி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (54)

## ஈழத்துச் சிதம்பரத்தில் வெள்ளியன்று கொடியேற்றம்

(யாழ் நிருபர்)

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் சிவன் கோயில் திருவெம்பாவை உற்சவம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

தினமும் காலை 7.00 மணிக்கு ஐயனார், சிவன் மூல மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று நடராஜப் பெருமான் திருச்சபையில் திருவெம்பாவை ஒதப்பெற்று முற்பகல் 11.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வரும் காட்சி இடம்பெறும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை இரதோற்சவமும் இரவு நடேசர் அபிஷேகம் மறுநாள் அதிகாலை அருத்ரா தரிசனமும் தீர்த்தோற்சவமும் பிற்பகல் "ஊடல்" உற்சவமும் இடம்பெறும்.

வழமை போன்று திருவிழா நடைபெறும் பத்து நாட்களிலும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினரும், அமரர் மகேஸ்வரன் அறப்பணி நிலையத்தினரும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

காரைநகர் மணிவாசகர் சபையினரால் மூன்று தினங்கள் திருவாசக விழா நடத்தப்படவுள்ளது. அடியார்களுக்கு வேண்டிய குடிநீர், மலசலகூட வசதி மற்றும் சுகாதார வசதிகளை காரைநகர் பிரதேச சபை வழங்கவுள்ளது.

காரைநகர் இ.போ.ச டிப்போவும் தனியார் பேருந்துச் சேவைச சங்கமும் திருவிழா நாட்களில் தினமும் யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பேருந்து போக்குவரத்துச் சேவையை வழங்கவுள்ளனர்.

இம்முறை புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பெருமளவு அடியார்கள் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (10)





யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களின் முகில் 2011ஓவியக் கண்காட்சி பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது, காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்களை பார்வையாளர்கள் பார்ப்பதையும், நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் விருந்தினர்களும் ஓவியங்களைப் பார்ப்பதை காணலாம். (படம் : பா. சிகான்)

## தலைக்கவசம் அவசியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் பொதுமக்கள் வீதி நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என கிளிநொச்சிப் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் செல்வோர் சிறிய தூரம் என்றால் தலைக்கவசம் அணியாது செல்வதாகவும், இதனால் பாதிக்கப்படுவது பயணிகள் மட்டுமல்ல. அவ்வாறு செல்பவர்களும்தான் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். எனவே, தொடர்ந்து இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றால் அவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (77)

## வவுனியா சிக்கன கூட்டுறவு சமாசம் பயனாளிகளுக்கு 67 மில்லியன் கடன்

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக 67 மில்லியன் ரூபா கடனுதவி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சமாசத்தின் தலைவர் நா. சேனாதிராஜா தெரிவித்தார்.

வவுனியா முத்தையா மண்டபத்தில் நேற்று முன்தினம் சமாசத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெற்ற போது தலைமையுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்,

சங்கங்களின் முக்கியமான நோக்கம் கிராம மட்டங்களில் கடன்களை வழங்கி பொருளாதார ரீதியாக அம்மக்களை மேம்படுத்துவதாகும். அந்த நோக்கத்திற்காக வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சங்கங்கள் இயங்கி வருகின்றது. இந்த நோக்கங்களை சரியான முறையில் செயற்படுத்தினாலேயே அம்மக்கள் நன்மையடைவார்கள்.

சங்கம் ஒன்று இயங்கவில்லை என்றால் அது பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால் சமாசம் இயங்காத நிலை ஏற்பட்டால் வவுனியா மாவட்டத்தில் உள்ள பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும். இவ்வாண்டு நாம் 7000 அங்கத்தவர் வரையில் 67 மில்லியன் ரூபா கடன்களை வழங்கியிருக்கின்றோம்.

எனவே கடன்களைப் பெறுகின்றவர்கள் ஒழுங்கான முறையில் கடன்களை திருப்பி செலுத்த வேண்டும். எனினும் 121 சங்கங்களில் கடன்களை கட்டாத சங்கங்களாக 10 சங்கங்களை சட்டத்தின் முன்கொண்டு செல்லவிருக்கின்றோம் அது துர்ப்பாக்கிய நிலையாகத்தான் உள்ளது. எனினும் சமாசத்தின் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டுமானால் நீதி மன்றத்தை நாடியாக வேண்டும் எனத் தெரிவித்தார்.

## செயலக ஒளிவிழாவில் யாழ். ஆயர் சவுந்தரநாயகம்



(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வுகளில் யாழ். மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

யாழ். செயலக நலன்புரிக் கழகமும் சமுர்த்தி அலுவலகமும் இணைந்து 2011ஆம் ஆண்டிற்கான ஒளிவிழா நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தன.

இந்நிகழ்வுகள் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக வருகை தந்திருந்த யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு யாழ். செயலகத்தால் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டு ஒளிவிழா நிகழ்வுகள் ஆரம்பித்தன.

இந்நிகழ்வில் கிறிஸ்தவ மதகுருமார், சிறுவர், சிறுமியர், யாழ் செயலக அதிகாரிகள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு ஒளிவிழா நிகழ்வுகளில் இன்புற்றனர். கலை நிகழ்வுகளாக கிறிஸ்தவப் பாடல்களும், நத்தார் தாத்தா நிகழ்வுகளும் நடைபெற்றன.

மேலும் இந்நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், சமுர்த்தி உதவி ஆணையாளர் சிவசிறி, உதவி அரச அதிபர் தலைமைப் பீடம் ஜெ. பரந்தாமன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் யாழ். அரச அதிபர், ஆயர், சமுர்த்தி ஆணையாளர் ஆகியோர் ஒளிவிழா நிகழ்வு குறித்து உரை நிகழ்த்தினர். (பா)

## காரைநகரில் கள் விற்பனை நிலையம் பொது அமைப்புக்கள் கண்டனம்

(யாழ். நிருபர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்துக்குச் செல்லும் புது வீதியில் தற்காலிகமாக இயங்கி வந்த 'கள்' விற்பனை நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம் ஆரம்ப நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றபோதிலும் இந்த நடவடிக்கைக்கு பொது அமைப்புக்கள் பல எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளன.

சிவன்கோயில் வீதியில் நிரந்தரமாக 'கள்' விற்பனை நிலையக் கட்டடம் அமைப்பதற்கு காரைநகரில் உள்ள பொதுஅமைப்புக்கள் பலவும் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளன.

காரைநகர் மணிவாசகர் சபை, மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை, மருதடி இந்து இளைஞர் மன்றம், பிள்ளையார் சனசமூக நிலையம், காரைநகர் அபிவிருத்திச் சபை போன்ற அமைப்புகள் தமது ஆட்சேபனை அடங்கிய மகஜரை காரைநகர் பிரதேச சபை ஊடாக பனை, தென்னை வள அபிவிருத்திச் சபைக்கு அனுப்பியுள்ளது. (10)

# பச்சிலைப்பள்ளியில் கலாசார மண்டபம் புதிதாக அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு



(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கு நூற்றி அறுபது இலட்சம் ரூபா செலவில் புதிய கலாசார மண்டபம் ஒன்றினை அடுத்த ஆண்டு அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினரால் நடாத்தப்பட்ட கலாசார விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருஇனத்திற்குரிய தனித்துவமான கலை கலாசார விழுமியங்களை பாதுகாப்பது அந்த இனத்தின் மிக முக்கிய பொறுப்பாகும். எனவே இதற்கான புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது எம் போன்ற அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் கடமை அந்த வகையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் மிக நீணடகால விருப்பமும் தேவையுமான ஒரு சிறப்பான கலாசார மண்டபம் அடுத்த ஆண்டு நிவர்த்தி செயயப்படும்.

பாரம்பரிய கலை கலாசாரங்களை கிராம மட்டங்களிலிருந்தே ஊக்குவித்து பாதுகாக்க வேண்டும் அந்த வகையில் இப்பிரதேசம் ஒரு முன்மாதிரியாக செயற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார். இவ் விழாவில் பசுந்துளிர் எனும் நூல் வெளியீடும் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் தலைமையில் பளை மத்திய கல்லூரியில் இடம் பெறற இந் நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கரைச்சி கண்டாவளை உதவி அரச அதிபர்களான நாகேஸ்வரன் சத்தியசீலன் அரச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் வட மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் அரியரத்தினம் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் பொது மக்கள் எனபபலர் கலந்து கொணடனர். (29)

## சிரமதானப் பணிகள்

பொற்பதி வீதிப் பகுதியில் டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணிகள் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இச்சிரமதானப் பணிகளை கோப்பாய் பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து மேற்கொண்டனர்

இச் சிரமதானப்பணிகள் மூலம் டெங்கு நோய் பரவுவது கட்டுப்படுத்தப்படும் எனவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது (எஸ்)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(26.12.2011 –திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
மார்கழி - 10 ஆம் நாள்.
இராகுகாலம் 7.57-9.27, சுபநேரம் 12.27 -1.57 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப . 8.19 வரை
திதி: துதியை மு.இ. 10.05 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்**– பணம் வரும், திடீர் பயணம், குடும்பத்தில் குதூகலம், அயல்வீடு தொல்லை, ஞாபகமறதி.

**ரிஷபம**:–குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுக் கஷ்டம், காரியத்தடை, தொழில் ஆதாயம், தேக சுகம்

**மிதுனம்** :–பணம் வரும், அதிகாரப் போட்டி, இனசன உதவி, நண்பர் வரவு, கடன் படல்,

**கடகம்**:– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம்,காரிய சித்தி, தொழில் விருத்தி, தேகம் சுகம்

**சிம்மம்**:– பணம்வரும், குடும்பத்தில் குதூகலம், காரிய சித்தி, இனசன அழைப்பு, திடீர் அதிர்ஷ்டம்

**கன்னி** :– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம்,காரியத்தடை, ஞாபகமறதி,திடீர் பயணம், தேகம் சுகம்.

**துலாம்** :–பணம் வரும், குடும்பத்தில் குழப்பம், காரியத்தடை, அயல்வீடு தொல்லை

**விருச்சிகம்**:–குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், அயல் வீடு உதவி, ஞாபகமறதி, தேகம் சுகம்.

**தனுசு**:– பணம் வரும்,குடும்பத்தில் குழப்பம், மேலோர் சினம், அதிகாரப்போட்டி,

**மகரம**:– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம்,தேகம் பலவீனம், தொழில் மந்தம், ஞாபகமறதி

**கும்பம்** :– பணம் வரும், மறதியால் அவலம்,குடும்பத்தில் குழப்பம், திடீர் பயணம். தொழில் ஆதாயம்.

**மீனம்** :– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், தேக சுகம், திடீர் அதிஷ்டம், விபத்து வரும்.

## பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் குறைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை.

### -ஆதங்கப்படும் நோயாளர்கள்

(வடமராட்சி)

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்திய சாலையில் எல்லா வளங்களும் இருந்தும் அவற்றை சரியான முறையில் பாதுகாக்க முடியாது அதிகாரிகளும்,நோயாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையால் சிகிச்சையைப் பெறும் நோயாளர்கள் தாம் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வைத்தியசாலை வீதிகள் ஓரளவாக புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் வீதி சமிக்ஞைகள் இல்லாமையால் நோயாளர்கள் வீதியை கடக்கும் போது விபத்துக்களை எதிர்நோக்குவதாகவும் இதனால் வாகனங்களும் வேகக் கட்டுப்பாட்டை மீறி செல்வதால் அவ் வீதியூடாக பயணிக்கும் ஏனைய பொதுமக்களும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

வைத்தியசாலை வீதியில் வாகனங்கள் நிறுத்தத்தடை என்று விளம்பரம் ஒட்டப்பட்ட நிலையிலும் வாகனங்களை நிறுத்தியும் பாதை ஓரத்தில் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கும் எதிராக பருத்தித்துறை பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

இப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதிகாரிகள் முன்னிலையில் பொது மக்களால் தெரிவிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு மேல் அதிகாரிகளால் அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டது.

எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுத்து பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுத்தருமாறு பொதுமக்களும் நோயாளர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (116)

# முன்பள்ளி சிறார்கள் கௌரவிப்பு காரைநகரில் கோலாகல விழா



(காரைநகர்)

கரைநகர் பிரதேச முன்பள்ளிகளில் கல்வி கற்று 2012ஆம் ஆண்டு தரம்-01க்குச் செல்லும் மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் கலைவிழாவும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மேற்படி விழா காலை 10.30 மணியளவில் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி அ.புஸ்பராணி தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள், முன்பள்ளி சிறார்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு மங்களவிளக்கேற்றல், கொடி ஏற்றத்துடன் ஆரம்பமானது. இதன் பிரதம விருந்தினராக சுந்தரம் டிவகலா (ஓய்வு பெற்ற செயலாளர் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு, கிழக்கு மாகாணம்), சிறப்பு விருந்தினராக க.விக்னேஸ்வரன் (முன்பள்ளி உதவி கல்விப்பணிப்பாளர், தீவக வலயம்), செல்வி யோ.தயானி (திட்ட இணைப்பாளர், அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாணம்) மற்றும்பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து சிறுவர்களின் காவடி, கும்மி கிராமிய நடனம் என்பன இடம் பெற்றன. (இதில் கௌரவ விருந்தினர், தலைவர் உரையாற்றியதுடன், செல்வி யோ.தயாணி சிறுவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தார் (50)

# மழைநீர் தேங்கி நிற்கும் கிடங்கை செப்பனிடுமாறு மக்கள் கோரிக்கை

(திருநெல்வேலி)

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் காணப்படும் பாரிய குழியொன்றில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தினால் அவ் வீதியினால் பயணிக்கும் பயணிகள் பலரும் பலத்த நெருக்கடிகளை எதிர் நோக்குவதாகத் தெரிகிறது.

வீதியின் இரண்டு பக்கங்களையும் அகலமாகக் கொண்டு அகன்ற அளவிலும் நீண்ட அளவிலும் பெரிதாகக் காணப்படும் இந்த இடம் ஒரு குளம் போலக் காட்சியளிக்கிறது. இக் கிடங்குகளுக்குள் விழுந்து செல்லும் வாகனங்கள் அள்ளித் தெளிக்கும் சேற்றுநீர் வீதியில் செல்வோர் மீதும் அக்கம் பக்கத்திலுள்ள கடைகள் மீதும்பட்டு அசிங்கப்படுத்துவதைத் தினமும் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

இது பற்றிப் பலரும் பல தடவைகள் உரிய இடங்களுக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப் படவில்லை என அப்பகுதி மக்களால் குறை கூறப்படுகிறது.

பாடசாலைமாணவர்கள், உத்தியோகத்தர்கள், வயோதிபர்கள், நோயாளர்கள் எனப்பலராலும் பாவிக்கப்படும் இவ்வீதியிலுள்ள இப் பாரிய வெள்ளக் கிடங்கை உடன் செப்பனிட்டுத் தருமாறு பொதுமக்களினால் உரியவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. (137)

# கடற்படையினரால் திருத்தப்படும் பண்ணை தாம்போதி வீதி



(யாழ்ப்பாணம்)

தீவகத்தையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பிரதான வீதியான பண்ணை தாம்போதி வீதி தீவக கடற்படையினரால் சிரமதானம் மூலமாக திருத்தப்பட்டு வருகின்றது.

முன்னர் இவ் வீதிப் போக்குவரத்து செய்வதற்கு தகுதியற்ற நிலையில் குண்டும் குழியுமாக சேதமடைந்திருந்தது.

இதனால் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பெரும் சிரமத்தின் மத்தியிலும் தமது பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் பொதுமக்கள் பிரயாணத்தை சுலபமாக மேற்கொள்ளும் வகையில் கடற்படையினர் இவ் வீதியை திருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (85)

# எல்லாமே அழிந்தன பத்திரிகை மட்டும் வெளிவந்தது

க. வேல்தஞ்சன்

**சுனாமியால்** மிகமோசமாக அழிந்த, இந்தோனேசியாவின் சுமத்திராப் பகுதியிலுள்ள, அச்சே மாகாணத்திலிருந்து வெளிவரும் "செரம்பி இந்தோனேசியா" எனும் செய்திப் பத்திரிகை, தனது 200 பணியாளர்களில் ஏறத்தாழ 100 பேர் அவர்களது குடும்பங்களுடன் சுனாமிக்குப் பலியாகிப்போன செய்தியை, ஆச்சே மாகாணத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரம் மக்களின் செய்திகளுடன் வெளியிட வேண்டிய பெரும் துர்திஷ்ட நிலையில் இருந்தது.

மொத்தத்தில் அரைவாசிப் பணியாளர்கள் மட்டுமல்ல, இயந்திர சாதனங்கள், விநியோக வசதிகள் என்பனவும் முற்றாக அழிந்துபோயின. அச்சு இயந்திரம் அழிந்தது. பத்திரிகைக் காரியாலயம் மோசமாகச் சேதமடைந் தது. தப்பிப் பிழைத்திருந்த பணியாளர்கள் கூட தத் தமது குடும்பங்களில் பலரைப் பறிகொடுத்திருந்தனர். அவர்களது வீடுகள் அழிந்திருந்தன.

பெரும் அனர்த்தம் விளைந்து பெரும் துயரம் சூழ்ந்திருந்த வேளையிலும் எஞ்சியிருந்த நூறு பேருள் அடங்கும் செய்தியாளர்களும், பணியாளர்களும் தமது மனவுறுதியை ஒரு நான்கு நாட்களுக்குள் மீள்கட்டுமானம் செய்து கொண்டு ஐந்தாம் நாள் "செரம்பி இந்தோனேசியா" தினசரியை மீண்டும் வெளியிடத் துணிந்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருத்துவ உதவிகள் பெறுவது எங்கே என்று உறவுகள், குடும்பம், நண்பர்கள் முதலியோரிடமிருந்தான செய்திகள் என்ன என்று தெரிவிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு அப்பத்திரிகைக்குரியதாகவிருந்தது. அதனால், அந்த அவசர காலத்தில் தமது துயரங்களையும், இழப்புக்களையும் தாங்கிக் கொண்டு அப்பணியாளர்கள் கடமைபுரியத் தொடங்கினர்.

ஆச்சே மாகாணத்தின் தலைநகரமான பண்ட ஆச்சே நகரிலிருந்து வெளிவந்து கொணடிருந்த இப்பத்திரிகை சுனாமி அழிவின் பின்னர் அங்கிருந்து ஐந்து மணித்தியால மோட்டார் வாகனப் பயணத் தூரத்திலுள்ள லொக்சியுமவே எனுமிடத்தில் தற்காலிக அலுவலகத்தை ஒழுங்கு செய்து இரண்டாவது அச்சு இயந்திரமொன்றின் மூலம் வெளிவருகிறது.

அனர்த்தத்தின் பின்னர் இரண்டு வாரங்களுக்கு இலவசமாகவே இப்பத்திரிகை விநியோகிக்கப்பட்டதாக இப்பத்திரிகை உட்பட மேலும் 9 பத்திரிகைகளை இந்தோனேசியாவின் வெவ்வேறு இடங்களில் வெளியிடும் "பி.ரி. இன்டோபேர்ஸ்ரா பிறிம்மமீடியா" எனும் நிறுவனத்தின் இயக்குநர் சென்றிஜன்ரு தெரிவித்தார்.

தாம் நாள் எப்படி அவர்களால் மீண்டும் பத்திரிகையை வெவெளியிட முடிந்தது எனும் கேள்விக்கான விடை யாதெனில் ஆச்சேயிலிருந்து வெளிவரும் ஒரேயொரு பத்திரிகை என்பதால் தம்முடைய பொறுப் புணர்வை அவர்கள் உணர்ந்தமை என்பதாகும்.

சுனாமி அனர்த்தத்துக்கு முந்திய காலங்களிலும் "செரம்பி இந்தோனேசியா" போர் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆச்சே மாகாணத்தில் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அக்காலத்தில் 25,000இற்கும் 30,000 இற்கும் இடைப்பட்ட அளவு பத்திரிகைகள் தினமும் விற்பனையாகின. சுனாமியின் பின்னர் பத்திரிகை விநியோகம் 10,000 ஆக குறைந்தது.

குநர்களையும், 72 தேசியப் பத்திரிகை நிறுவனங்களையும், 10 செய்தி முகவர் நிலையங்களையும், பிராந்திய, உலகளாவிய பத்திரிகைக் கழகங்களையும், அனர்த்த காலங்களில் அழிந்த பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்தும் தகவல் களைக் கொடுப்பதற்காக தமது இழப்புகளையும், துயரங்களையும் தாங்கிக் கொண்டு பணியாற்றும் அப்பத்திகைப் பணியாளரகளுக்கு உதவும் படி கேட்டுள்ளது.

WAN அமைப்பின் இயக்குநர் நாயகம் திமொத்தி பால்டிங் பின்வரும் வேண்டுகோளை தமது அமைப்பு அங்கத்தவர்களிடம் விடுத்திருந்தார்.


> **தென்னாசியாவை உலுக்கிய சுனாமிப் பேரவலம் நிகழ்ந்து இன்று ஏழு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. அந்த இயற்கை அனர்த்தத்தின் வடுக்கள் இன்னமும் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் புதைந்துள்ளன. இந்த ஆழிப்பேரவலத்தின் மையம் சுமத்திராத்தீவு. அங்கே அழிந்து சிதைந்துபோன ஆச்சே மாகாணத்தின் கற்குவியல்களையும் தாண்டி செய்திச் சேவையாற்றியது செரம்பி இந்தோனேசுஷா என்ற நாளிதழ். அழிவிலிருந்து மீண்டெழுந்த அந்தப் பத்திரிகையின் மீள் பிரவாகம் குறித்து யாழ். குடா செய்தியாளர் ஒருவரின் பார்வை இது.**

"பெரும்பாலான எமது செய்தியாளர்களும், பணியாளர்களும் தமது குடும்பங்களை, வீடு வாசல்களை எல்லாம் இழந்து விட்டனர். விளம்பரம் போன்றவற்றால் எவ்வித வருமானமும் இல்லாத இவ்வேளையில் கூட தினமும் எங்கள் நிறுவனம் பணத்தைச் செலவு செய்கிறது. பத்திரிகை விநியோகத்தை இலவசமாகச் செய்கிறது" என்றும் அவர் கூறினார்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து மொத்தச் செய்தியாளர்கள், பணியாளர்களில் அரை வாசிக்கும் மேற்பட்ட வர்களை இழந்த நிலையில் ஐந் வீழ்ச்சி கண்டுள்ளது" என்றும் சென்றி ஜன்ரு கூறினார்.

பிரான்ஸ், பாரிஸ் நகரத்தில் தளம் கொண்டு இயங்கும் செய்திப் பத்திரிகைகளின் உலக நிறுவனம் (The World Association of Paper - WAN) செரம்பி இந்தோனேசியா பத்திரிகைக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன், நிறுவன (WAN) அங்கத்தவர்களாக உள்ள 102 நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகளின் நிறைவேற்று இயங்

"மிகத்துயரகரமான ஒரு சூழலில் அழிந்த பிரதேசமொன்றில் மக்களுக்குத் தகவலளிக்கின்ற பணியைத் தொடர்ந்துகொண்டிருக்கின்ற எமது சக நண்பர்களான "செரம்பி இந்தோனேசியா" இன் செயதியாளர்கள், பணியாளர்களுக்கு எவ்வளவு தொகையாயினும் நிதி யுதவியொன்றை அனுப்புவதை பரிசீலிக்கும்படி அழைப்பு விடுக்கின்றேன்" என்று அவரது வேண்டுகோள் அமைந்திருந்தது.



# சிதம்பர ரகசியம் – ஆதிரைச் சிறப்பு

இருபத்து ஏழு நட்சத்திரங்களிலே, இரண்டே இரண்டு நட்சத்திரத்துக்கு மட்டுமே "திரு" என்ற அடை மொழி உண்டு. அது சிவனுக்கே உரிய "திரு"வாதிரை நடசத்திரமும், விஷ்ணுவுக்கு உரிய "திரு" வோண நட்சத்திரமும் ஆகும். அதிலும் சிவபெருமானை "ஆதிரையான்" என்றே அழைப்பார்கள். ஆதிரை நட்சத்திரம் ஆனது வான சாஸ்திரத்திலும், சோதிடத்திலும் பேசப்படும் 6ஆவது நட்சத்திரம் ஆகும். தற்கால வான இயல் அறிவின்படி இதை "ஓரியன் குழு"வில் சொல்லப் படுகின்றது. இந்த ஓரியன் குழுவில் 5 நட்சத்திரங்கள் முக்கியமாய்ச் சொல்லப்படுகின்றது. அவறறில் மிகுந்த ஒளியுள்ள நட்சத்திரம் திருவாதிரை நட்சத்திரமே ஆகும். வட கிழக்குத் திசையில் காணப்படும் இந்த நட்சத்திரம் எப்போதும் மற்ற நான்கு நட்சத்திரங்களுடனேயே காணப்படும்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இந்தத் திருவாதிரை நட்சத்திரம் ஒவ்வொரு மாதமும் வந்தாலும், மார்கழியில் வரும் திருவாதிரைக்குத் தனிச் சிறப்பு. ஆடவல்லான், தன் பிரபஞ்ச நாட்டியத்தை அன்றே ஆடியதாய்க் கூறுவார்கள். அதிலும் சிதம்பரத்தில் இதற்குத் தனியான மகிமை. சிதம்பரத்தில் முக்கியமான திருவிழா, மார்கழித் திருவாதிரைத் திருவிழா என்றே சொல்லலாம். மற்ற நாட்களில் கோயிலுக்கு உள்ளே இருக்கும் நடராஜர்



அன்று வீதியில் உலா வருவார். அதோடு அல்லாமல் நடராஜருக்குச் சிறப்பு அபிஷேகங்களும் நடக்கும். இந்த ஆதிரைச் சிறப்பு நாள் விழாவாய்க் கொண்டாடப்பட்டதைப் பரிபாடல் என்னும் சங்கப் பாடலில் இருந்தும் தெரிந்து கொள்ள முடிகின்றது. மாணிக்கவாசகர் வாழ்வும் வாக்கும் (திருவாதவூரடிகள் புராணமும் திருவாசகமும்) எதிர்வரும் 30.12.2011 வெள்ளிக்கிழமை திருவெம்பாவை ஆரம்பமாகி, ஜனவரி 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை-திருவாதிரை அன்று நிறைவு பெறுகிறது. இலங்கையில் ஈழத்துச் சிதம்பரம் என்று சொல்லப்படும் காரைநகர் சிவன் கோவிலில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

# முதலிடத்திற்கு முன்னேற இந்தியாவுக்கு வாய்ப்பு!

## ஆஸி. டெஸ்ட் தொடரை முழுமையாக வென்றால் சாத்தியம் என்கிறது ஐ.சி.சி.

International Cricket Council

(துபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் முதல் 4 இடங்களின் முறையே இங்கிலாந்து (125 புள்ளி), இந்தியா (118 புள்ளி), தென்னாபிரிக்கா (116 புள்ளி)', அவுஸ்ரேலியா (103 புள்ளி) ஆகிய அணிகள் முதல் நான்கு இடங்களிலுள்ளன.

இந்த நிலையில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றினால் முதலிடத்தை நெருங்க வாய்ப்பு இருப்பதாக ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 4-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றால் இந்தியாவின் தரவரிசை புள்ளி எண்ணிக்கை 123 ஆக உயர்ந்து விடும். அப்போது இங்கிலாந்தை விட 3 புள்ளிகள் மட்டுமே பின்தங்கி இருக்கும். 3-1 என்ற கணக்கில் வென்றால் இந்தியாவின் புள்ளி 120 ஆக இருக்கும். அவுஸ்ரேலியாவின் புள்ளி 101ஆக குறைந்து விடும். தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியா வசப்படுத்தினால் ஒரு புள்ளி மட்டுமே கூடுதலாகக் கிடைக்கும். அதே சமயம் அவுஸ்ரேலியத் தொடரை முழுமையாக கைப்பற்றினால் அதன் புள்ளிகள் 111ஐ எட்டிவிடும். இந்தியாவின் புள்ளியும் அப்போது 111-ஆக சரிந்து விடும். இருப்பினும் மயிரிழையில் இந்திய அணி அவுஸ்ரேலியாவை விட முன்னிலை வகிக்கும். அவுஸ்ரேலியா 3-1 என்ற கணக்கில் வெற்றியை சுவைத்தால் அதன் புள்ளி 108 ஆகவும், இந்தியாவின் புள்ளி 113 ஆகவும் இருக்கும். தொடர் 2-2 என்று சமனில் முடிந்தால் அவுஸ்ரேலியாவுக்கு 2 புள்ளி அதிகரிக்கும். இந்தியா 2 புள்ளிகளை இழக்கும்.

## இன்றைய ஆட்டங்கள்

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்றைய தினம் மெல்பேர்னில் ஆரம்பமாகின்றது.

ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இத்தொடர் இரு அணிகளுக்கும் சவால் நிறைந்ததாக இருக்கும் என கருதப்படுகின்றது.

□□□

இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இன்றைய தினம் டர்பன் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

தென்னாபிரிக்க அணி ஏற்கனவே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இனிங்ஸ் மற்றும் 87 ஓட்டங்களால் இலங்கை அணியை வீழ்த்தி முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆரம்ப கால பயிற்றுநரிடம் ரிக்கி அவசர ஆலோசனை!

(மெல்பேர்ன்)

அண்மைக் காலமாக பிரகாசிக்கத் தவறிவரும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங், தனது துடுப்பாட்டத்தை மெருகேற்றுவதற்காக தனது ஆரம்பகால துடுப்பாட்ட பயிற்றுநரான கிறேக் ஷிப்பர்ட்டினின் அவசர உதவியை நாடியுள்ளார்.



அவுஸ்ரேலியாவின் மாநில அணிகளுக்கிடையிலான போட்டிகளில் 19 வருடங்களுக்குமுன் டாஸ்மேனிய மாநில அணியின் மிக இளம் வீரராக (17 வயதில் அறிமுகமானவர் ரிக்கி பொன்டிங். அப்போது அவ்வணியின் பயிற்றுநராக விளங்கியவர் கிறேக் ஷெப்பர்ட்.

தற்போது 37 வயதான ரிக்கி பொண்டிங் அணியில் நிலைப்பாரா என்பதே கேள்விக்குறியாகியுள்ளது. இந்நிலையில் தனது துடுப்பாட்டத்தை மீண்டும் பலப்படுத்துவதற்காக கிறேக் ஷிப்பர்ட்டினின் உதவியை தான் நாடியதாக பொன்டிங் தெரிவித்தார்.

இவ்வாரம் நடைபெற்ற மெல்பேர்ன் துடுப்பாட்ட பயிற்சி முகாம் முழு அணிக்கும் சிறந்ததாக அமைந்தது.

நான் எனது முதலாவது மாநில பயிற்றுநரான கிறேக் ஷிப்பர்ட்டை அழைத்து, பந்துவீச்சு இயந்திரத்தின் பந்துவீச்சுக்கு நான் துடுப்பெடுத்தாடுவதை அவதானிக்குமாறு கோரினேன். எனவே நான் என்ன செய்கிறேன் என்பதை அவர் பார்க்க முடியும். எனது ஆட்டத்தை அவர் மிக நன்றாக அறிவார்.

எந்தத் துறையில் நான் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதை நான் அறிவேன் என பொன்டிங் கூறினார்.

# செல்சியா, டாட்டன்ஹாம் ஆட்டம் சமனிலையில் நிறைவடைந்தது



(டாட்டன்ஹாம்)

பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில், செல்சியா, டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிகள் மோதிய போட்டி சமனிலையில் நிறைவடைந்தது.

இங்கிலாந்தில் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் செல்சியா, டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிகள் மோதின. டாட்டன்ஹாம் அணிக்கு இம்மானுவல், தொடக்கத்திலேயே (8ஆவது நிமிடம்) கோல் அடித்து கைகொடுத்தார். 23 ஆவது நிமிடத்தில் செல்சியாவின் டானியல் பதில் கோல் அடித்தார். ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது. இதன் காரணமாக இரு அணிகளுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டது.

# சேர்பிய வீரருடன் பயஸ் இணைவு

(சென்னை)

சென்னை ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் இந்திய வீரர் லியாண்டர் பயஸ், சேர்பியாவின் ஜான்கோ டிப்சரிவிச் இணைந்து விளையாடவுள்ளனர்.

சென்னையில் உள்ள நுங்கம் பாக்கத்தில், ஏ.டி.பி., அந்தஸ்து பெற்ற சென்னை ஓப்பன் டென்னிஸ் தொடர், அடுத்த மாதம் 2-8ஆம் திகதிகளில் நடக்கவுள்ளது.

இத்தொடரின் இரட்டையரில் பயஸ், சேர்பியாவின் ஜான்கோ டிப்சரிவிச்சுடன் இணைகிறார்.



பி.பி.சி. செய்தி நிறுவனத்தினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் சிறந்த விளையாட்டு ஆளுமைக்கான விருதினை இந்த ஆண்டு சேர்பியாவின் ரென்னிஸ் நட்சத்திரம் ஜோகோ விச் பெற்றுக் கொண்டார். இந்த ஆண்டு ரென்னிஸ் தொடர்களில் அதிக கிண்ணங்களைக் கைப்பற்றியதுடன், தரப்படுத்தலில் முதல் நிலையைப் பெற்றமை போன்ற காரணங்களால் இவ்விருது ஜோகோவிச்சுக்கு வழங்கப்பட்டது என பி.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த விருதை கடந்த ஆண்டு ஸ்பெயின் ரென்னிஸ் வீரர் ரபேல் நடால் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விருது வென்றதை மகிழ்ச்சியான தருணமாகப் பார்க்கின்றேன். அடுத்த ஆண்டும் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி முதல் நிலை இடத்தை தக்கவைப்பேன் என ஜோகோவிச் விருது பெற்ற பின்னர் தெரிவித்தார்.

# வட்மோருக்கு அழைப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநர் பதவி தொடர்பாக கலந்துரையாடுவதற்காக பாகிஸ்தானுக்கு வருமாறு அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பிரபல பயிற்றுநர் டேவ் வட்மோருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது. களத்தடுப்பு பயிற்றுநராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜூலியன் பௌண்டெய்னுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்புவிடுத்துள்ளது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளின் முன்னாள் பயிற்றுநரான டேவ் வட்மோர், தற்போது ஐ.பி.எல். அணியான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பயிற்றுநராக கடமையாற்றுகிறார்.

அவரை பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக நியமிப்பதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் "பயிற்றுநர் தேடுதல்குழு" கடந்த சில மாதங்களாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தபோதிலும் இதுவரை உடன்பாடொன்று ஏற்படவில்லை.

இந்நிலையில், இது குறித்து கலந்துரையாடுவதற்காக அடுத்தமாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு வட்மோருக்கும் பௌண்டெய்னுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

# பிரிஸ்பேன் ரென்னிஸ் ஷரபோவா விலக முடிவு

(மொஸ்கோ)

ரஷ்ய ரென்னிஸ் நட்சத்திரமான மரியா ஷரபோவா அடுத்த மாதம் நடைபெறவுள்ள பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் சுற்றுப்போட்டியிலிருந்து விலகியுள்ளார். கணுக்காலில் ஏற்பட்டுள்ள காயமே இதற்குக் காரணம்.

2012 ஆம் ரென்னிஸ் பருவகாலத்தை பிரிஸ்பேன் சர்வதேசச் சுற்றுப்போட்டியில் ஆரம்பிப்பதற்கு நான் திட்டமிட்டிருந்தேன். அது அற்புதமான புகழைக் கொண்ட வரவேற்கும் நிகழ்வாகும். ஆனால் துரதிஷ்டவசமாக எனது கணுக்கால் 100 சதவீதம் குணமடையாததால் நான் இவ்வருடம் அப்போட்டியில் பங்குபற்ற மாட்டேன் என அறிக்கையொன்றில் மரியா ஷரபோவா தெரிவித்துள்ளார்.

இச்சுற்றுப்போட்டி ஜனவரி 1 முதல் 8 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. செரீனா வில்லியம்ஸ், கிம் கிளிஜ்ஸ்டர்ஸ், சமந்தா ஸ்டோரஸ் முதலான பிரபல வீராங்கனைகள் தாம் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.



எவ்வாறெனினும், விம்பிள்டன், அமெரிக்க மற்றும் அவுஸ்ரேலிய பகிரங்கச் சுற்றுப்போட்டிகளில் முன்னாள் சம்பியனான ஷரபோவா, எதிர்வரும் அவுஸ்ரேலிய பகிரங்க சுற்றுப்போட்டியில் விளையாட விரும்புவதாகக் கூறியுள்ளார். அவுஸ்ரேலிய பகிரங்க சுற்றுப் போட்டி ஜனவரி 15 ஆம் திகதி முதல் மெல்பேர்னில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சப்பல் மறுப்பு




(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கு ஆலோசனை வழங்கவிருப்பதாக வெளியான தகவலை இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரும், அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டனுமான கிரேக் சப்பல் மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், நான் அவுஸ்ரேலிய அணியினருடன் இதுவரை பேசவில்லை. இனிமேல் பேசவும் மாட்டேன். அவுஸ்ரேலிய அணியினரைச் சந்தித்து பேச நான் ஒருபோதும் ஒத்துக் கொள்ளவில்லை. நான் சந்தித்து பேச இருப்பதாக வெளியான செய்திகள் எங்கிருந்து வருகிறது என்பது தெரியவில்லை.

ஆனால், அவுஸ்ரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இத்தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றுவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாகவே நான் உணர்கின்றேன். சொந்த இடம், வேகப்பந்து வீச்சின் பலம் என்பன அதற்கு அதிக வெற்றி வாய்ப்பைக் கொடுக்கும் என்று நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.



# மகாவம்சத்தின் புதிய அத்தியாயங்கள் பொன்சேகாவுக்கு அதில் இடமேயில்லை

(கொழும்பு)

இலங்கை இராணுவ வரலாற்று நூலில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பற்றி, புதிதாக எழுதப்படும் மகாவம்ச அத்தியாயங்களிலும் சேர்க்கப்படமாட்டார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை வரலாற்று நூலான மகாவம்சத்தில் புதிதாக மூன்று பகுதிகளை சேர்க்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார். அந்தவகையில், இலங்கையின் 30 ஆண்டுகாலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றிய பங்களிப்பை மையப்படுத்தியதாக மகாவம்சத்தின் புதிய பகுதிகள் சேர்க்கப்படவுள்ளன.

எனினும், மகாவம்சத்தின் புதிய பகுதிகளில் சரத் பொன்சேகா பற்றிய எந்தக் குறிப்புகளும் இடம்பெறமாட்டாது என்று இலங்கையின் கலாசார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புதிதாக உருவாக்கப்படவுள்ள மகாவம்சப் பகுதிகளில் 1978 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் நிகழ்வுகள் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் இதில் முக்கியமாக விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டது பற்றிய வரலாற்றுக் குறிப்புகளே அதிகம் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து முன்னாள் இராணுவத் தளபதிகள் வரிசையில் இருந்து நீக்கப்பட்ட சரத் பொன்சேகா பற்றிய குறிப்புகள் இலங்கை இராணுவ வரலாற்று நூலில் இருந்தும் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தனியார் பல்கலைக்கழக சட்டம் விரிவுரையாளர்கள் கண்டனம்

உயர்கல்விச் சமூகத்துடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் அரசாங்கம் தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கான சட்டமூலத்தை கொண்டுவர முனைவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் குற்றஞ்சாட்டுகிறார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் கட்டுப்பாடுகளின்றி அமையத் தொடங்கினால் அரச பல்கலைக்கழகங்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் போக்குவரத்துத் துறை மற்றும் மருத்துவத் துறைகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை தான் இனி பல்கலைக்கழகம் சார் உயர்கல்வித் துறைக்கும் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் நிர்மால் ரஞ்சித் தெரிவித்தார்.

தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க அக்கறை செலுத்தும் அரசாங்கம் அரச பல்கலைக்கழகங்களுக்கு போதுமான நிதியொதிக்கீட்டை வழங்க அக்கறை செலுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நாட்டில் போதுமான பல்கலைக்கழகங்கள் இல்லாத நிலையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அவசியம் தான் என்பதை ஒப்புக்கொண்ட நிர்மால் ரஞ்சித், ஆனால் அரசு இந்தப் பிரச்சினையை சர்வ சாதாரணமாக அணுக நினைப்பதாகவும் கூறினார்.பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சில விரிவுரையாளர்களின் தூண்டுதலே காரணம் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள கருத்தினையும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் மயமாகிய தேயிலைத் தோட்டங்கள்; ஐம்பதுக்கு மேற்பட்டவை மூடப்பட்டன

(கொழும்பு)

கடந்த 18 வருடகாலத்தில், தனியார் மயப்படுத்தப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதமொன்றில் இலங்கை தோட்ட சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் தம்மிக ஜயவர்தன மற்றும் செயலாளர் நாத் அமரசிங்க ஆகியோர் கையெழுத்திட்டுள்ள இக்கடிதத்தில் தோட்ட நிர்வாகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களின் சம்பளப் பாகுபாடு, தோட்டங்களில் தங்குமிட வசதியின்மை, உத்தியோகத்தர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாமை, உத்தியோகத்தர்களின் வீடுகள் புனரமைக்கப்படாமை, தோட்டத்துறைக்கான முறையான விவசாய கொள்கைகள் வகுக்கப்படாமை போன்றன தோட்டத்துறை உத்தியோகஸ்தர்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

பல தடவைகள் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளபோதிலும் தோட்ட உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தோட்டங்களின் உரிமையாளர்கள் தவறியுள்ளதாக தம்மிக ஜயவர்தன தெரிவித்துள்ளார். 18



வருடங்களுக்குமுன் தோட்டங்களை தனியார் மயப்படுத்தும்போது முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர்கூறியுள்ளார். பெருந்தோட்டத்துறை தற்போது சீரழியும் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இவ்விவகாரம் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் எனவும் தம்மிக ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## இறுதிக்கட்ட யுத்தத்தில் நடந்தது என்ன தண்டனை பெற்ற அதிகாரியே தகவல்

### அரசியல் தஞ்சம் கோருவதே நோக்கம் என்கிறது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடையும் விடுதலைப் புலிகளை கொன்று விடுமாறு, பாதுகாப்புச் செயலர் கோத்தபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருந்ததாக இராணுவத்தின் மேஜர் ஜெனரல் ஒருவர் அளித்துள்ள சாட்சியம் 'அற்பத்தனமான' நோக்கம் கொண்டது என்று பாதுகாப்பு அமைச்சு உயர்அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அந்த மேஜர் ஜெனரல் தர அதிகாரி ஒழுங்கு நடவடிக்கையின் அடிப்படையில் வெளியேற்றப்பட்டவர். அவரது கவலைகள் என்னவென்று நாம் அறிவோம். அவரது நோக்கம் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் பெறுவது தான்.

அவர் இராணுவத்தில் இருந்த காலத்தில், அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்ததால், எமது கண்காணிப்புப் பட்டியலில் இடம்பெற்றிருந்தார். என்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி கூறியுள்ளார். எனினும் அந்த மேஜர் ஜெனரலின் பெயரை பாதுகாப்பு அமைச்சு உயர்அதிகாரி வெளியிடவில்லை. போரின் இறுதிக்கட்டத்தில் சரணடையும் விடுதலைப் புலிகளைக் கொன்று விடும் படி கோத்தாபய ராஜபக்ஷவினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததாக, அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ள மேஜர் ஜெனரல் சாட்சியம் அளித்துள்ளதாக பிரித்தானியாவின் 'ரெலிகிராப்' நாளேடு கடந்தவாரம் தகவல் வெளியிட்டிருந்தது.

முன்னதாக இந்தத் தகவல் ஊடகங்களில் வெளியானபோது, 58ஆவது டிவிசனைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் எவரும் படையை விட்டு விலகி வெளிநாட்டில் தஞ்சமடையவில்லை என்று ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதித்தூதுவர் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறைக்கைதியை காதல்செய்கிறேன் திருமணம் செய்ய அனுமதியுங்கள்

### ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

சிறையில் இருக்கும் தனது காதலரைத் திருமணம் செய்ய அனுமதி தருமாறு கோரி வவுனியா நெயகுளம் வீரபுலத்தைச் சேர்ந்த சுதர்ஜினி என்பவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, எனது காதலரான சக்திவேல் இலங்கேஸ்வரன் புதிய மகசீன் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ளார். நான் அவரை 12 வருடங்களாக நேசித்து வந்துள்ளேன். அவர் சிறையில் இருந்து வெளிவருவார் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவருக்கு 30 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரை நான் சிறைச்சாலையில் திருமணம் செய்ய விரும்புகிறேன். இதற்கான அனுமதியை தந்துதவுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். எனது காதலரும் தங்களிடம் பொது மன்னிப்புக் கோரியிருக்கிறார் என்பதை அறிந்துள்ளேன். இந்நிலையில் எமது திருமணப் பதிவினை சிறைச்சாலையில் மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

## சுற்றுலா விடுதியில் துப்பாக்கிச் சூடு பிரித்தானியப் பிரஜை ஸ்தலத்தில் பலி

தங்காலை ஹோட்டல் ஒன்றில் வைத்து வெளிநாட்டவர் ஒருவர் நேற்று அதிகாலை 3 மணியளவில் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். குறித்த ஹோட்டலில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின்போது கலவரம் ஏற்பட்டுள்ளது. இதன்போது குறித்த இடத்திற்குச் சென்ற வெளிநாட்டு ஜோடிகள் மீது ஒரு குழு தாக்குதல் நடத்தியதோடு, துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மோதல் சம்பவத்திற்கும் தங்காலை பிரதேச அரசியல்வாதிக்கும் இடையில் தொடர்பு காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இசை நிகழ்ச்சி நடந்தவேளை வெளிநாட்டு பிரஜையின் மனைவியிடம் பிரதேச அரசியல்வாதி உள்ளிட்ட குழு தகாத முறையில் நடக்க முயற்சித்தது இதனால் ஏற்பட்ட வாக்குவாதம் கலகமாக மூண்டதுடன் அரசியல்வாதியும் அவரது குழுவினரும் வெளிநாட்டு ஜோடிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தில் வெளிநாட்டு பிரஜை உயிரிழந்துள்ளதோடு அவருடைய மனைவி காயமடைந்து காலி கராபிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.


## அம்பாறையில் அடைமழை கிராமங்கள் பல வெள்ளத்தில்

அம்பாறையில் பெய்து வரும் அடைமழையினால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், அப்பகுதி மக்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.கடல் கொந்தளிப்புடன் காணப்படுகிறது.

ஒலுவில் துறைமுக வெளிச்சவீடு வரை கொந்தளிக்கும் கடல்நீர் வந்து போகிறது. சாலைகளில் தேங்கும் மழைநீரால் மக்கள் போக்குவரத்தும் பெரும்சிரமத்துக்கு உள்ளாகிறது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பில் 48 மணிநேரத்தில் 245.8 மில்லிமீற்றர்மழை பெய்துள்ளது பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 48 மணித்தியாலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 245.8 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இருதினங்களாக இடைவிடாது தொடர்ந்து மழை பெய்துவருகின்றது. இக்காலப்பகுதியில் 245.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதானநிலைய பொறுப்பதிகாரி கே.சிவதாஸ்தெரிவித்தார்.

அரை மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை மழை வீழ்ச்சி கணக்கிடப்பட்டு வானிலை அவதான நிலையத்தின் கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கடும்மழை காரணமாக புதிய காத்தான்குடி, வெல்லாவெளி, ஆரையம்பதி, களுவாஞ்சிகுடி,செங்கலடி, கிரான் போன்றபல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது வெள்ளம் காரணமாக பலகுடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். பலவீதிகள் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.படுவான்கரைபிரதேசமெங்கும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது மழை காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் கடும் மழை பெய்துகொண்டிருக்கின்றது.

34. 
இந்த உருவில் உள்ள ஒவ்வொரு சதுரத்தினதும் ஒருபக்க நீளம் 1சென்ரிமீற்றர் ஆகும். இவ்வுருவில் நிறந் தீட்டப்பட்டிருக்கும் பகுதியின் பரப்பளவு யாது?

..............................................................................................

35. ஒரு கேக்கில் இருந்து 3/5 பங்கை கமலும் 1/5 பங்கை நிமலும் பங்கிட்டுக் கொண்டனர். எஞ்சிய கேக் முழுவதின் என்ன பின்னமாகும்?

..............................................................................................

36. 5l நீர் நிரப்பப்பட்ட பாத்திரம் ஒன்றிலிருந்து 1L 350 ml நீர் வெளியே எடுக்கப்பட்டால் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?

..............................................................................................

37. 5m 40 cm நீளமான ஒரு நாடாவில் இருந்து 2m 60cm நீளமான ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டதெனில் எஞ்சியுள்ள நாடாவின் நீளம் யாது?

..............................................................................................

38. 1kg மிளகாய் ரூபா 80 எனின், 150 g மிளகாயின் விலை யாது?

..............................................................................................

39. மு.ப. 12.40 ஐ நியம நேரத்தில் எழுதுக.

..............................................................................................

40. ஒன்று ரூபா 12.50 படி 2 கொப்பிகளையும், 1kg ரூபா 36 படி 1kg 500g சீனியையும், 1L ரூபா 80 படி 750ml தேங்காயெண்ணையும் வாங்கிய ஒருவர் கடைக்காரரிடம் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

..............................................................................................

**ஒழுங்கின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

41. தொடங்காதே / அறியமுன் / செய்யத் / ஒன்றின் / அதனைச் / இயல்பை

..............................................................................................

42. நெற்றி / நிலத்திலே / உழைத்தான் / தொழிலாளி / சிந்த / வியர்வை

..............................................................................................

**பின்வரும் ஆங்கில வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.**

43. Frome where are you? :..............................................

44. Please give me a pencil? :..............................................

45. May I read this book? :..............................................

## கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வெளியீடு - 6 கேள்விகளின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 12. தயிர் | 23. ரூபா 4000 | 34. 1 |
| 02. 3 | 13. தங்கம் | 24. 220 | 35. 3 |
| 03. 2 | 14. தும்பிக்கை | 25. 2 | 36. 2 |
| 04. √ | 15. கார் | 26. 3 | 37. 1 |
| 05. √ | 16. வடகிழக்கு/ஈசானமூலை | 27. 1 | 38. 2 |
| 06. √ | 17. ஆகாய விமானம் | 28. 2 | 39. 2 |
| 07. √ | 18. கப்பல் | 29. 2 | 40. கருத்துள்ள தெளிவான விடைகளுக்குப் புள்ளி வழங்குக. |
| 08. √ | 19. வடமேற்கு/வாயுமூலை | 30. 2 | |
| 09. √ | 20. திங்கள், வியாழன் | 31. 2 | |
| 10. தீ | 21. புதன் | 32. 4 | |
| 11. தலை | 22. 90 | 33. 2 | |






# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I

1 மணி



# கல்வி முரசு

வெளியீடு 07



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. உலர்ந்த நிலையில் பயன்படுத்தக்கூடிய பழவகைகளில் ஒன்று.
   1) கொடிமுந்திரிகை 2) மரமுந்திரிகை 3) வாழைப்பழம் 4) மாம்பழம்

02. மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணம் செய்வோர் பாதுகாப்பிற்காக அணிந்து கொள்ள வேண்டியது யாது?
   1) கண்ணாடி 2) தலைக்கவசம் 3) சப்பாத்து 4) கையுறை

03. தர்ம சக்கரம், சிலுவை, பிறை, சூலம் என்பன சின்னங்களாக அமைந்திருக்கும் மதங்களின் வரிசை முறையே,
   1) இந்து மதம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம்
   2) பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து சமயம்
   3) பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து சமயம்
   4) பௌத்தம், இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம்


04. காற்றினால் பரவும் வித்தைக் கொண்ட தாவரம்?
   1) தென்னை 2) இலவம்பஞ்சு 3) மாங்காய் 4) பனங்காய்


05. தீ விபத்து ஒன்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் அல்லாதது,
   1) வாயு அடுப்பில் வாயு வெளியேற்றம் 2) மின் ஒழுக்கு
   3) பலத்த இடிமின்னல் 4) தண்ணீர்ப் பஞ்சம்


**கீழேயுள்ள வினாக்களில் சில காரியங்களும், அவற்றைச் செய்யக்கூடிய உத்தியோகத்தர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியான முறையில் தொடர்புபடுத்தும்போது வரும் இலக்கத்தை அவற்றுக்கு நேரேயுள்ள அடைப்புக் குறியினுள் இடுக.**

| | | |
|---|---|---|
| 06. பொதுநல சேவைகளில் ஈடுபடுதல் | ( ) | 1. அதிபர் |
| 07. தினவரவு இடாப்பில் பதிதல் | ( ) | 2. தாபாற்காரர் |
| 08. பொருட்களை நிறுத்தல் | ( ) | 3. சமூக சேவகன் |
| 09. பதிவுத் தபால்களை விநியோகித்தல் | ( ) | 4. வகுப்பாசிரியர் |
| 10. பாடசாலையை நிர்வகித்தல் | ( ) | 5. வியாபாரி |

**11 -13 வினாக்களுக்குத் தரப்பட்ட குறியீடுகளையும், வாக்கியங்களையும் அவதானித்து சரியான விடையின் கீழ்க் கீறிடுக**

மாணவர் பாடசாலைக்குச் சென்றனர் 


மைதானத்தில் மாணவர்கள் விளையாடுகின்றனர் 

பாடசாலையில் நூலகம் உண்டு 

மாணவர் சுற்றுலா சென்றனர் 


11. மாணவர்கள் என்ற சொல்லுக்குப் பொருத்தமான உரு யாது?

1) 2) 3)



12. நூலகம் என்ற சொல்லுக்குப் பொருத்தமான உரு யாது?

1) 2) 3)



13. சுற்றுலா என்ற சொல்லுக்குப் பொருத்தமான உரு யாது?

1) 2) 3)



**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கீறிடுக.**

14. ஒரு பென்சிலின் விலை 6 ரூபா எனின், அரை டசின் பென்சிலின் விலை என்ன?
1) ரூபா 72 2) ரூபா 82 3) ரூபா 36

15. ஒரு விளையாட்டுக் காரின் விலை 100 ரூபா இவ்வாறான 4 கார்களை வாங்கிய பின் 500 ரூபாவைக் கடைக்காரனிடம் கொடுத்தால் அவருக்குக் கடைக்காரர் கொடுக்கும் மீதிப்பணம் எவ்வளவு ரூபா?
1) 100 ரூபா 2) 500 ரூபா 3) 300 ரூபா

16. ஒரு சதுரக் காணியின் பரப்பு 16 சதுர மீற்றர் எனின், காணியின் ஒருபக்க நீளம் எவ்வளவு மீற்றர்?
1) 2 மீற்றர் 2) 4 மீற்றர் 3) 8 மீற்றர்


17. கடை ஒன்றில் 4 போத்தல்கள் உள்ளன. ஒவ்வொரு போத்தலிலும் அரை டசின் இனிப்புக்கள் வீதம் உள்ளன. கடையில் உள்ள இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 20 2) 40 3) 24

**கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் ஒன்று ஏதோ ஒரு வகையில் வேறுபடுகின்றது. வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

18. 1) பென்சில் 2) பேனா 3) புத்தகம் 4) மேசை
19. 1) கணவாய் 2) ஓணான் 3) நண்டு 4) மீன்
20. 1) கதவு 2) வீடு 3) யன்னல் 4) ஓடு
21. 1) மல்லிகை 2) ரோஜா 3) தென்னை 4) செவ்வரத்தை
22. 1) ஆடு 2) சிங்கம் 3) பூனை 4) நாய்


**கீழ்வரும் வினாவில் உருவங்களுக்கும் எண்களுக்கும் இடையேயான தொடர்பைக் கருத்திற் கொண்டு வினாக் குறியிட்ட கூட்டில் வரவேண்டிய எண்ணைக் காண்க.**

23.




1) 10 2) 12 3) 18


24.




இந்த உருக்கள் மூலம் ஆக்கத்தக்க வடிவம் எது?



1) 2) 3) 4)



25.



அருகேயுள்ள உருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 5 3) 6 4) 8

**கீழே முதலில் தரப்பட்டுள்ள சம்பவத்துடன் பொருத்தக்கூடிய வாக்கியத் தொடரை அதனையடுத்துத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

26. பரீட்சையில் சித்தியடையாத பாலா அதனை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.
1. துள்ளுகின்ற மாடு பொதி சுமப்பதைப் போன்று
2. நிலத்தில் சிந்திய பாலை நினைத்து அழுவதைப் போன்று
3. சாண் ஏற முழம் சறுக்குவதைப் போன்று

27. சிவபாலனுக்கு எவ்வளவு புத்திமதி கூறியும் மது குடிக்கும் பழக்கத்தை அவனால் விட முடியவில்லை.
1. ஆற்றினுள் விறகு வெட்டிப் போட்டதைப் போன்று
2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாததைப் போன்று
3. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பதைப் போன்று

28. தாசன் என்பவன் சரியான கஞ்சன். அவனிடம் இருந்து ஏதாவது பொருளைப் பெறுவது மிகக் கடினமாகும்.
1. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் என்பதைப் போன்று
2. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு என்பதைப் போன்று
3. ஆமையிடமிருந்து இறக்கை கேட்பதைப் போன்று

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

29. சுகத் என்பவன் 16 ரொபிகளை வாங்கி அவற்றில் 3/4 பகுதியைச் சாப்பிட்டு முடித்தான் எனின், அவனிடம் மீதியாக எத்தனை ரொபிகள் இருக்கும்?
1. 12 2. 8 3. 4

30. என்னிடமிருந்து ரம்புட்டான் பழங்களில் அரைவாசியைச் சாப்பிட்டு முடித்த பின்னர் மீதியாக 4 ரம்புட்டான்கள் என்னிடமிருந்தது எனின், ஆரம்பத்தில் என்னிடமிருந்த ரம்புட்டான்கள் எத்தனை?
1. 2 2. 4 3. 8

31. ஒருவர் தான் பயணம் செய்ய வேண்டிய தூரத்தின் 1/8 பகுதியை நடந்து சென்றார். அவர் நடந்து சென்ற தூரம் 2 km எனின், அவர் பயணம் செய்ய வேண்டிய மொத்தத் தூரம்.
1. 4 km 2. 8 km 3. 16 km

**கீழே முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் அதே கருத்தைத் தரக்கூடிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

32. கிழக்கில் சூரியன் உதிக்கும்போது ரோஜாப்பூ சிரிக்கின்றது
1. சூரியன் உதிக்கும்போது ரோஜாப்பூ சிரிக்கின்றது
2. சூரியன் உதிப்பது ரோஜா மலர்வதேற்கே
3. சூரியன் உதிக்கும்போது ரோஜா மலர்கின்றது

33. பொங்கிவரும் நீரோடை மனதைக் கவர்கின்றது.
1. நீர் பொங்கி வருவதால் அது உடலுக்கு இதமானது
2. நீர் பொங்கி ஓடிவரும்போது அது மனதைக் கவர்கின்றது
3. ஓடும் நீர் எப்பொழுதும் மனதைக் கவரும் வகையிலேயே பொங்கி வரும்

# இது சகலருக்குமான நாடு

கற்றுக் கொண்ட பாடங்களிற்கான நல்லிணக்க ஆணைக்குழு வடக்கு கிழக்கில் முக்கிய இடங்களில் பல அமர்வுகளை செய்திருந்தது. அத்தனை இடங்களிலும் ஒரே விதமான காட்சிகளே அரங்கேறியிருந்தன. பெண்கள் வயது வேறுபாடில்லாமல்





தங்களது கணவர்களையும் பிள்ளைகளையும் கண்டுபிடித்துத் தருமாறு கண்ணீருடன் மன்றாடியிருந்தனர். இந்த அமர்வுகளில் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படாமையினால் இந்தப் புதிய சிக்கலை உலகம் அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை போலுள்ளது. யுத்தத்தில் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன ஆண்களின் குடும்பங்களின் பிரச்சினையில் அரசு அதிக அக்கறை காட்டியிருக்க வேண்டும். சாதாரண பொதுமக்கள் மற்றும் புலி உறுப்பினர்களின் குடும்பங்களே இந்த கணக்கில் பெரும்பாலுமுண்டு. காணாமல் போனவர்கள், விதவைகள், கொல்லப்பட்டவர்கள் பற்றிய சரியான கணக்கு யாரிடமும் இல்லை. இது பல்லாயிரங்களில் வரும். துரதிஸ்டவசமாக அரசிடம் இவர்கள் குறித்த அக்கறை இருப்பதாக தெரியவில்லை. இது சமூகரீதியிலும் கலாசாரரீதியிலும் மோசமான தாக்கத்தை உண்டாக்கக் கூடிய பிரச்சினை. இப்போதே இதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கி விட்டன.

இள வயது விதவைகள், குடும்ப வறுமை, கைவிடப்பட்டவர்கள் போன்ற நிலையிலிருக்கும் அகதிப் பெண்கள் வேறு வழியில்லாமல் விபசார நடவடிக்கைகளிற்கு ஈர்க்கப்படும் சம்பவங்கள் குறித்து அங்கொன்றும் இங்கொன்றுமாக மிகச் சிலர் பதிவு செய்துள்ளனர். ஆயிரக் கணக்கான ஆண்கள் கொல்லப் பட்டுள்ளனர். அல்லது தடுப்பு முகாம்களிலுள்ளனர். இதனால் குடும்பங்களை நடத்த வேண்டிய தவிர்க்கவியலாத பொறுப்பு பெண்களிடம் வந்துள்ளது. இந்த புதிய சூழலை எதிர்கொள்ள முடியாத பல பெண்கள் இந்த முடிவை எடுக்கிறார்கள்.

இந்த மையமாக வவுனியா இப்போது மாறி வருகிறது. தமிழ்ச் சமூகம் இதனை கணக்கிலெடுத்ததாகத் தெரியவில்லை. தகவலறியும் நோக்கத்துடன் வவுனியா நகர மையத்திலுள்ள இப்படியான இரண்டு மையங்களிற்கு அண்மையில் சென்றிருந்தேன். சினிமாவில் காண்பிக்கப்படும் பாலியல் தொழிலாளர்களிற்கு ஒப்பான வாழ்வை பழக்கப்படுத்திக் கொண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த நிறைய அகதிப் பெண்களை சந்திக்க முடிந்தது. இந்த விடுதிகள் இப்பொது ஓரளவிற்கு வெளிப்படையானவையாக இயங்கத் தொடங்கி விட்டன. வடக்கு கிழக்கில் இப்போதுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் இராணுவத்தினருக்கோ, புலனாய்வுத்துறையினருக்கோ தெரியாமல் எதுவும் நடக்க வாய்ப்பில்லை. அவர்களும் இதனை ஊக்குவிக்கிறார்களா என்ற சந்தேகம் உள்ளது.

நடந்து முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட்டில் வடக்கு கிழக்கிலுள்ள பெரும்பாலான ஈழத்தமிழர்கள் இந்திய அணியிணையே ஆதரித்திருந்தனர். ஈழத் தமிழர்களிற்கு வரலாற்று ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் இருக்கும் இந்திய அபிமானத்திற்கு அப்பால் இலங்கை குறித்த எதிர்ப்புணர்வு வெளிப்படையாகவே தெரிந்தது. ஒருவேளை இறுதிப் போட்டிக்கு கென்யா முன்னேறியிருந்தால் அந்த அணியினையே ஆதரித்திருப்போம் எனப் பலர் சொன்னார்கள். இதற்கு முக்கிய காரணம் இறுதிப் போட்டிச் சமயம் உலகக் கிண்ணத்தையும் யுத்த வெற்றியையும் சம்பந்தப்படுத்தி இராணுவ அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் கதைத்ததைச் சொல்லலாம்.

சரணடைந்த புலிகளை சுட்டுக் கொன்றார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ள சவேந்திர சில்வா உலகக் கிண்ண வெற்றி யுத்தத்தில் மரணித்த படையினருக்கு சமர்ப்பணம் செய்யப்படும் என சொல்லியிருந்தார். இதனால் இலங்கையணி விக்கெட் இழக்கும் சமயங்களில் தமிழர்கள் வெடி கொளுத்துமளவிற்குப் போனது.

இது சாதாரண ஒரு கிரிக்கெட் சம்பவம் மட்டுமல்ல. இதற்கு பின்னால் பெரிய உளவியல் உள்ளது. இலங்கை தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற தமிழர்களின் எதிர்பார்ப்பு யுத்த தோல்வியிலிருந்து வந்ததாக இருக்கலாம். அதனை போக்கி இது சகலருக்குமான நாடு, அனைத்து இனங்களும் சமமானவை என்ற புரிதலை ஏற்படுத்த வேண்டியது ஆட்சியாளர்களின் கடமை. யுத்தம் முடிந்து இரண்டு வருடங்களாகியும் அதற்கான எந்த நடவடிக்கையும் தொடக்கப் படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

யோ.கர்ணன் கட்டுரையிலிருந்து

---

# தமிழ்த் தேசியம் ஜனநாயகத்திற்குத் தயாராகவில்லை!

இவ்வளவிற்குப் பின்னரும் தமிழ்த்தரப்பின் போக்கில் எந்த மாற்றங்களையும் காணவில்லை. குறிப்பாக பல இணையத் தளங்கள் மற்றும் ஊடகங்களிலும் தமிழ்த் தேசிய அரசிய லிலும் இந்த ஜனநாயகமின்மையும் ஜனநாயக துஷ்பிர யோகமும் இன்னும் கோலோச்சுகின்றது.

'புலிகளிடம் கையில் துவக்கிருந்தது. இவர்களிடம் அது வாயிலும் பேனாவிலும் இருக்கிறது. பொதுவாக இன்னும் ஆயுதக் கலாசாரத்தை விட்டு தமிழ்ச் சமூகம் விலகவில்லை. அதன் மனதில் அது அத்தனை துப்பாக்கிகளையும் காவிக் கொண்டே திரிகிறது. எனவே தான் அது ஜனநாயகத்துக்கு தயாராகவில்லை' என்று ஒரு நண்பர் சொல்வது மிகச் சரியானதே. இதைச் சொல்பவர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்பது இன்னும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியதாகும்.

ஜனநாயகத்துக்குத் தயாராகாதவரையில் எந்தக் கதவுகளையும் நாம் திறப்பதற்குத் தயாராகவில்லை என்றே அர்த்தமாகும். அத்துடன் சகிப்புத்தன்மைக்கும் விட்டுக்கொடுப்புக்கும் ஏற்றுக் கொள்ளல்களுக்கும் ஆயத்தமில்லை. மாற்றுக் கருத்துகள், அபிப்பிராயங்கள், மாற்றுச் செயற்பாடுகள் என எதற்கும் இடமில்லை என்றுமாகும். இது உலகத்தின் பொதுப் போக்கிலிருந்து எம்மைத் தனிமைப்படுத்தி விடும். அத்துடன் வெளியுலகத்திலிருந்தும் அக நிலையிலும் நம் சமூகத்தையும் சுருக்கி விடும். இதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

அதாவது ஜனநாயகத்தை மறுப்பது, அதைத் துஷ்பிரயோகம் செய்வது என்ற நிலை வளர்ந்து கொண்டே போகிறது. இதை இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலின்போதும் வன்னி நிலவரங்களைப் பற்றி மே 17க்குப்பின்னர் வரும் பலவிதமான செய்திகள், தகவல்களை தமிழ்த் தரப்பு அணுகுவதிலும் அவதானிக்கலாம்.

மற்றையவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதில்லை, இடமளிப்பதில்லை என்பதிலேயே ஜனநாயகமின்மையை வளர்த்தெடுக்கும் நிகழ்ச்சிகள் வளரத் தொடங்குகின்றன.

ஒரு தரப்புச் செய்திகள் - கருத்துகள் - நிலைப்பாடுகளுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்தல், அந்தத் தரப்பை நியாயப்படுத்துதல், தருக்கங்களற்ற விளக்கங்கள், ஊகநிலைத் தகவல்களை வழங்குதல், தனிப்பட்ட விருப்பங்களைப் பொது அபிப்பிராயமாக்குதல் போன்றவை ஒருபக்கத்தை மட்டும் மக்களுக்குக் காட்டும் முயற்சியாகும்.

இதன் மூலம் மக்கள் ஏனைய பக்கங்களைப்பற்றி அறிய முடியாத நிலைக்குள்ளாக்கப் படுகின்றனர். இது அவர்களுடைய அரசியல் அறிவையும் பொதுப் புத்தியையும் பாதிக்கிறது. உலக அனுபவங்கள், சர்வதேச விவகாரங்களைப் பற்றி அறியவோ, அவற்றைப் பகுத்தாராயவோ முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர்.

இதனால், எளிதில் அவர்கள் பிறரால் ஏமாற்றப்படவும் அவர்களுடைய உழைப்பும் நம்பிக்கையும் வீணடிக்கப்படவும் ஏதுவாகிறது. குறிப்பாக ஜனநாயகம் பராமரிக்கப்படவில்லை என்றால், அங்கே மக்கள் மந்தைகளாக்கப்படுகின்றனர். மந்தைகளை இலகுவாக விரும்பிய பக்கம் சாய்த்து விடலாம். அப்படித் தாம் விரும்பிய பக்கம் சாய்த்துக் கொள்வதற்காகவே இப்படி மந்தைத்தனத்தைப் பராமரிக்கின்றனர் இந்தத் 'தமிழ்த் தேசியர்கள்'.


என்னதான் வேசமிட்டாலும் அடிமனதில் இருக்கும் சரக்கு எப்படியோ வெளியே தெரிந்து விடும் என்பார்கள். அதுமாதிரி, தமிழ்ச் சூழலின் 'ஜனநாயக வேசங்கள்' சிரிப்புக்கிடமாக உள்ளன. துலாம்பரமான ஜனநாயக மறுப்பை அவை தாராளமாகச் செய்கின்றன. இந்த ஜனநாயக மறுப்பு ஒற்றைப்படைத்தன்மையான ஒரு கருத்துலகத்தை மீண்டும் மிக வேகமாக வளர்க்கின்றன. இது மீண்டும் ஒரு அபாயப் பிரந்தியத்தை உருவாக்கப் போகிறது.

ஏற்கவே இந்தப் போக்குகளால் பாதிக்கப்பட்டது போதாதென்று இன்னும் அதே தவறான வழியையே இவை பின்பற்றுவது எவ்வளவு கொடுமையானது? எவ்வளவு முட்டாள்தனமானது? இந்த மன வன்மத்தை என்னவென்று சொல்வது? எதற்காக இப்படிப் பிடிவாத குணத்துடன் இந்த அரசியலாளர்களும் ஊடகர்களும் நடந்து கொள்கிறார்கள்?

இப்போது தமிழர்கள் அடைந்து கொண்டிருக்கும் பின்னடைவையும் தோல்வியையும் ஒப்பிடும்போது, ஏற்கனவே அடைந்த பின்னடைவுகளும் தோல்வியும் உண்மையில் பெரிதல்ல.

ஆனால், இதுவரையில் தமிழர்கள் அடைந்திருக்கும் தோல்வியையும் பின்னடைவையும் பிறர் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஒரு சிறிய இனம் தன் வல்லமைக்கு ஏற்றவரையில், தனக்குத் தெரிந்த வழிமுறைகளில் சரியோ பிழையோ போராடியிருக்கிறது. அதில் தோல்விகள், பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால், அந்தத் தோல்விகளிலிருந்தும் பின்னடைவுகளிலிருந்தும் அது எதைக் கற்றுக் கொண்டது? அந்தப் பாடங்களிலிருந்து அது தனது போராட்டப் பாதையை எப்படி மாற்றி வடிவமைத்துள்ளது? என்றே எல்லோரும் பார்ப்பார்கள். அதுவே மற்றவர்களின் அங்கீகாரத்துக்கும் ஆதரவுக்கும் வழிதரும்.




ஆனால், ஏற்பட்ட பின்னடைவுகளிலிருந்தும் தவறுகள், தோல்விகளிலிருந்தும் தமிழ்த்தரப்பு அரசியலாளர்களும் ஊடகர்களும் எந்த வழிமுறைகளையும் மாற்றிக் கொள்ளவில்லை.

குறிப்பாக ஜனநாயகச் சூழலை எப்படி புத்தாக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்? அதன் மூலம் திறந்த உரையாடல்களின் வழியே பல கருத்தியர்களையும் ஒருங்கிணைத்து முன்னே செல்வதற்கான உபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டும் என இவர்கள் சிந்திப்பதாக இல்லை.

*- நாலுபக்கம் வலைப்பூவிலிருந்து*

---

ஒரு முன்வைப்பை, ஒரு கருத்தை நிராகரிப்பது,அந்தத் தரப்பை மறுப்பது, அதற்கெதிராக வசைபாடுவது, பழிசுமத்திப் புறக்கணிப்பது என்ற வகையிலேயே அனைத்துக் காரியங்களும் நடக்கின்றன. எனவே, முன்னரே குறிப்பிட்டிருப்பதைப்போல, தமிழ்மக்களைச் சுற்றி ஒரு அபாயப்பிராந்தியம் மீண்டும் உருவாக்கப்படுகிறது, இந்தத் தமிழ்த் தேசியர்களால்.

இந்த அபாயப்பிராந்தியம் இரண்டு வகையில் அமையும். ஒன்று, மீண்டும் நாட்டில் ஒரு ஜனநாயக மறுப்புச் சூழல் உருவாக இது வழியேற்படுத்தும். அடுத்தது மறுபடியும் தமிழர்கள் அரசியல் அநாதைகளாக, அகதிகளாக, தோற்றுப் போனவர்களாக ஆகப்போகிறார்கள்.

எனவே கிடைத்திருக்கின்ற சூழலை உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியடைவதற்கான வழிகளைக் காணவேண்டும். மீண்டும் மீண்டும் சிங்கள இனவாதம் வெற்றி பெற தமிழர்கள் உதவக்கூடாது.

சர்வதேச வலைப் பொறியமைப்பில் குருட்டுத்தனமாக தமிழர்கள் விழுந்து கொண்டிருக்கவும் முடியாது.


# பெரும் திருட்டுக் கும்பல் சிக்கியது

(கரூர்)

கரூர்,திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட பகுதிகளில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள 17 கார்களை திருடிய 6 பேர் கைது செய்யப்பட்டனர். அவர் களிடம் 4.89 இலட்சம் பணம், 30 பவுண் நகைகளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். கரூர் பொலிஸாரின் வாகனச் சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.



வீதிச்சோதனையின் போது வேகமாக வந்த ஒரு காரை தடுத்து நிறுத்தி ஆவணங்களைக் கேட்டபோது, அவாகளிடம் ஆவணம் இல்லை. விசாரணையில் அவர்கள் அந்த ஜீப்பை கரூரில் ஒரு ஹோட்டல் முன் நிறுத்தப்பட்டிருந்தபோது திருடிக் கொண்டு வந்தது தெரியவந்தது. இதையடுத்து காரில் இருந்த சுரேஷ் (வயது-37), மணி என்கிற ராஜாமணி (வயது-34), சசிகுமார் (வயது- 20) ஆகியோரைக் கைது செய்தனர். இதேபோல் இன்னொரு வாகனச் சோதனையிலும் கார் திருடும் கும்பல் சிக்கியது. விசாரணையில் அவர்கள் திருச்சியைச் சேர்ந்த பாபுலால் என்கிற ஜாபர் (வயது-24), ராமகிருஷ்ணன் (வயது-35), சாகுல்அமீது (வயது-34) என்பதும், இவர்கள் அனில்குமார், ராஜாமணி, சசிகுமார் ஆகியோருடன் சேர்ந்து கார் திருடுவதும் தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 6 பேரையும் கைது செய்தனர்.



கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி புனித நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில், கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்து தீபாராதனை காட்டும் மக்கள்.

# சமூக இணையத்தளங்களுக்கு நீதிமன்றம் கடும் உத்தரவு

(டில்லி)

இணையத்தளங்களில் சமூக விரோத மற்றும் மதத் துவேஷ கருத்துகள் இடம்பெற்றிருந்தால் அவற்றை பெப்ரவரி 6-ஆம் திகதிக்குள் நீக்கிவிட வேண்டும் என்று சமூக இணையத்தளங்களுக்கு டில்லி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.


சமூக இணையத்தளங்களான ஃபேஸ்புக், கூகுள், யாகூ மற்றும் மைக்ரோசாஃப்ட் உள்ளிட்ட 22 இணையத்தளங்களில் மதங்களிடையே வன்முறையைத் தூண்டும் வகையிலான கருத்துகள் அல்லது சமூக விரோதக் கருத்துகள் இடம் பெற்றுள்ளதாக புகார்கள் வந்துள்ளன. இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிபதி முகேஷ் குமார், ஒன்றரை மாதத்திற்குள் இத்தகைய கருத்துகளை இணையத்தளங்கள் நீக்கவேண்டும் என்று உத்தரவிட்டார். இதேவேளை, இணையத்தளங்களில் தவறான கருத்துகள் இடம்பெறுவது தொடர்பாக எதிர்ப்பு வலுக்கவே அவற்றை நீக்குவது தொடர்பாக கண்டிப்பான உத்தரவுகளை மத்திய அரசு பிறப்பிக்க வேண்டியிருக்கும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் கபில் சிபல் தெரிவித்திருந்தார். இதற்கு கடைசி நாளாக டிசம்பர் 20 நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில் நிறுவனங்கள் அரசின் உத்தரவைக் கடைப்பிடிப்பதில்லை என்றும், பல்வேறு ஆபாஷ புகைப்படங்கள், தவறான கருத்துகள் இடம்பெற்றிருப்பது ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், சிடிக்களைப் பார்த்ததில், கடுமையான, அவதூறு செய்திகள் சமூக இணையத்தளங்களில் இடம் பெற்றிருப்பது தெரியவந்தது. சில கருத்துகள் வன் முறையைத் தூண்டும் வகையிலும் உள்ளன. இத்தகைய சூழலில் எதிர்த்தரப்பு வாதத்தைக் கேட்க வேண்டிய அவசி யமே இல்லை. ஒரு தலைப்பட்சமாகத் தீர்ப்பு அளிப்பதில் எவ்வித தவறும் இல்லை. மேலும் வழக்கின் முகாந்திரத்தைக் கருத்திற்கொண்டு அனைத்து இணையத்தள நிறுவனங்களும் ஆட் சேபகரமான கருத்துகள், புகைப்படங்களை நீக்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதருக்கும் மத ரீதியில் சில அசைக்க முடியாத நம்பிக்கை இருக் கும். இத்தகைய உணர்வுகளை எவ்வளவு தொகை கொடுத்தாலும் ஈடுகட்ட முடியாது. எனவே இது போன்ற கருத்துகள், துவேஷங்கள் ஆகியவற்றை நீக்க வேண்டும் என நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# கிறிஸ்மஸ் பண்டிகை பக்தர்கள் வேளாங்கன்னிக்கு வருகை

(நாகை)



வேளாங்கன்னியில் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நள்ளிரவு சிறப்பு கூட்டு திருப்பலி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான கிறிஸ்மஸ் கூட்டு திருப்பலி நேற்று நள்ளிரவு நடந்தது. காலை 6 மணிக்கு பேரால யத்தில் திருப்பலியும், காலை 8 மணிக்கு கூட்டு திருப்பலியும் நடைபெற்றது. இதையொட்டி வேளாங்கன்னி கோவிலில் இலட்சக் கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர். நேற்று முன்தினம் முதலே அவர்கள் வேளாங்கன்னிக்கு வரத்தொடங்கினர். இதனால் வேளாங்கன்னி நகரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டு உள்ளது.

# புலனாய்வுப் பிரிவு பொய்ச் சாட்சியங்களை உருவாக்குகிறது

இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு தமக்கு எதிராக பொய் சாட்சியங்களை உருவாக்குவதாக 2ஜி அலைக்கற்றை வழக்கின் முக்கிய குற்றவாளியான ஏ.ராசா தெரிவித்துள்ளார். தமது முன்னாள் உதவியாளரான ஆசீர்வாதம் ஆச்சாரியாவை அதற்குப் பயன்படுத்தி, டில்லி நீதிமன்றத்தில் பொய்ச் சாட்சியம் வழங்க வைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ராசாவின் முன்னாள் பிரத்தியேக செயலாளரான ஆச்சாரியா, அவரது சந்திப்புக்கள், நட்பு வட்டாரம் குறித்த பல முக்கிய விடயங்களை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன், தமக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக ஆச்சாரியா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என ராசா சார்பில் ஆஜரான சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக, 2ஜி அலைக்கற்றை வழக்கில் தொடர்புடையவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிணை இரத்துச் செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கூடங்குளம் போராட்டக்காரர்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை

(கூடங்குளம்)



கூடங்குளம் அணு உலைக்கு எதிராக போராட்டம் தொடர்ந்து நடந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார். அணு உலையில் ஏற்கனவே அறிவித்தபடி விரைவில் உற்பத்தி துவங்கும். போராட்டக்குழுவுக்கு பணம் எங்கிருந்து வருகிறது என்பது பற்றி விசாரணை நடந்து வருகிறது. போராட்டக்காரர்கள் பணம் எங்கிருந்து வருகிறது என்பது பற்றி விளக்கம் தரவில்லை. நிலக்கரி உற்பத்தி குறைந்து விட்டதால் அணு உலை மூலம் மின்சார உற்பத்தி அவசியமாகிறது என நாராயணசாமி கூறினார்.

# கோவில் வியாபாரத்தில் நட்டம்

(சபரிமலை)

பிரசாதம் தயாரிக்கப் பயன்படும் வெல்லத்தில் கலப்படம் இருந்ததால், தயாரிக்கப்பட்ட அரவணை பிரசாதம் கெட்டு விட்டது.

இவ்வாறு கெட்டுப்போன 20 ஆயிரம் டின், அரவணை பிரசாதம் அழிக்கப்பட்டது. இதன் மதிப்பு 12 இலட்ச ரூபாய். கேரள சபரிமலை ஐயப்பன் கோவிலில், தற்போது மண்டல உற்சவம் நடந்து வருகிறது.

இக்கோவிலுக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். கோவிலில் அப்பம், அரவணை ஆகி யவை முக்கிய பிரசாதங்களாக விற்பனை செய்யப்படுகின்றன.

இப்பிரசாதங்கள் தயாரிக்கப் பயன்படும் வெல்லத்தில் அனுமதி மறுக்கப்பட்ட டெட்ராசென் மற்றும் சண்செய்ட் ஆகிய இரசாயனப் பொருடகள் சேர்க்கபபட்டு இருப்பது தெரிந்தது.

இவைகள், லட்டு மற்றும் ஐஸ்கிரீம் போன்றவற்றைத் தயாரிக்கப் பயன்படுபவை. இதை அடுத்து, களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 100 தொன் வெல்லம் பயன்படுத்த தகுதியில்லாத பொருளாக வைக்கப்பட்டது.

அவற்றை திருப்பி எடுத்துக் கொள்ளுமாறு விநியோகம் செய்தவர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 19 ஆம் திகதி சபரி மலை அரவணை தயாரிப்பு நிலையத்தில் தயாரிக்கப்பட்டு டின்களில் அடைக்கப்பட்ட அரவணை புளித்து, பழுதாகி, டின்களின் மூடி பொங்கி தானா கவே வெடித்தது. இவ்வாறு 20 ஆயிரம் டின்கள் கெட்டுப்போனது கண்டுபிடிக்கப்பட்டு அதிகாரிகளின் உத்தரவுப்படி அழிக்கப்பட்டது.

# ராஜஸ்தானில் 5000டாக்டர்கள் ராஜினாமா

(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தான் மாநிலத்தில், சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி, 5,000 டாக்டர்கள் ராஜினாமாக் கடிதம் கொடுத்துள்ளனர். இதனால், அரசு மருத்துவமனைகளில், மருத்துவ சேவைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. சம்பள உயர்வு, குறிப்பிட்ட கால அவகாசத்தில் பதவி உயர்வு போன்றவற்றை வழங்க வேண்டும் எனக் கோரி, ராஜஸ்தான் மாநிலத தில் அரசு டாக்டர்கள் கடந்த, 21ஆம் திகதி முதல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், சுயநல சக்திகள் சிலரின் தூண்டுதலால், வேலை நிறுத்தம் நடப்பதாக, மாநில அரசு குறை கூறி வருகிறது. இந்நிலையில், கடந்த 23ஆம் திகதி முதல், டாக்டர்களின் போராட்டம் தீவிரம் அடைந்துள்ளது. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட டாக்டர்கள் தங்களின் பதவியை ராஜினாமாச் செய்துள்ளனர். டாக்டர்களின் வேலை நிறுத்தம் குறித்து அமைச்சர்கள் குழு விவாதித்தது. இதில், டாக்டர்களின் போராட்டத்தில் நியாயமில்லை. எனவும், அவர்களின் கோரிக்கைகளை எல்லாம், இந்த ஆண்டு ஜூலை மாதமே, மாநில அரசு நிறைவேற்றி விட்டதாகவும், சில தரப்பினரின், குறிப்பாக சுயநல சக்திகளின் பிடிவாதம் காரணமாகவே, டாக்டர்களின் வேலை நிறுத்தம் நடந்து வருகிறது. பதவி உயர்வில், பல மடங்கு உயர்வு வேண்டும் என்றும், சம்பளத்தில் பல மடங்கு உயர்வு வேண்டும் என்றும், அவர்கள் கேட்கின்றனர். அரசால், இதை நிறைவேற்ற முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தத்தை முறியடிக்க, ஓய்வு பெற்ற டாக்டர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இராணுவம், எல்லைப் பாதுகாப்புப் படை, ரயில்வே நிர்வாக டாக்டர்களின் சேவையும் கோரப்பட்டுள்ளன. மாநிலத்தில் மொத்தமுள்ள, 6,441 டாக்டர்களில், 473 டாக்டர்கள்



வேலை நிறுத்தத்தில் சேரவில்லை. தொடர்ந்து பணிக்கு வராமல் இருந்த, 25 டாக்டர்களை, மாநில அரசு பணிநீக்கம் செய்துள்ளது.

உலகச் செய்திகள்

# கியூபாவில் 3000கைதிகளுக்கு விடுதலை



(ஹவானா)

கியூபாவில், மனிதாபிமான அடிப்படையில், மூவாயிரம் சிறைக் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்படும் என, அந்நாட்டு ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ அறிவித்துள்ளார். கியூபா நாடாளுமன்றத்தின், இரண்டாவது கூட்டத் தொடரின் முடிவில் பேசிய ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ, கத்தோலிக்க சர்ச், பல்வேறு பிராட்டஸ்டன்ட் சர்ச்சுகள் ஆகியவற்றின் கோரிக்கைகளின் அடிப்படையிலும், முதன் முறையாக, போப் கியூபாவுக்கு வருவதை முன்னிட்டும், மூவாயிரம் கைதிகள் விடுவிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த 1998, ஜனவரியில் அப்போதைய போப், ஜான்பால் கியூபாவுக்கு பயணம் மேற்கொண்டதை ஒட்டி, 299 சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தற்போது, மிகப் பெரிய எண்ணிக்கையில் கைதிகள் விடுவிக்கப்பட உள்ளனர். இவர்களில், 25 நாடுகளைச் சேர்ந்த, 86 கைதிகளும் அடங்கும். ஆனால், 2009, டிசம்பரில் கைதான அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்பந்ததாரர் ஆலன் கிராஸ் என்பவரை, விடுதலைப் பட்டியலில் ஜனாதிபதி சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை விதிக்கும் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படும் எனவும், ரவுல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார். 2006 இல், பிடல் காஸ்ட்ரோவிடம் இருந்து, ஜனாதிபதி பதவியை பெற்ற போது, இந்த திருத்தங்களைக் கொண்டு வருவதாக உறுதியளித்த ரவுல், இதுவரை கொண்டு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவிலும் மக்கள் ஆர்ப்பாட்டம்




ரஷ்யாவில் பிரதமர் விளாடிமிர் புட்டினை பதவி விலகக் கோரி தலைநகர் மொஸ்கோவில் நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இம்மாதம் நடைபெற்ற ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தல் மோசடியானது எனக்கூறி கடந்த இரு வாரங்களாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 29,000 பேர் பங்குபற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் சுமார் 120,00 பேர் பங்குபற்றியதா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். உலக முன்னாள் செஸ் சம்பியனும் தற்போதைய அரசியல்வாதியுமான கெரி கஸ்பரோவ், முன்னாள் நிதியமைச்சர் அலெக்ஸி குர்தின் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தின்போது உரையாற்றினர். சுமார் 20 வருடங்களுக்குமுன் சோவியத் யூனியன் சிதறிய பின்னர் ரஷ்யாவில் இடம்பெற்ற பாரிய ஆர்ப்பாட்டத்தொடராக இது கருதப்படுகிறது. இதேவேளை பிரதமர் விளாடிமிர் புட்டின் ராஜினாமாச் செய்ய வேண்டும் என சோவியத் யூனியனின் கடைசி தலைவரான மிகைல் கொர்பசேவும் நேற்று கோரிக்கை விடுத்தார்.

80 வயதான மிகைல் கொர்பசேவ் பேட்டியொன்றில் இது குறித்து கூறுகையில், "விளாடிமிர் புட்டின் இப்போது விலக வேண்டும் என நான் அவருக்கு ஆலோசனை கூறுவேன். அவர் இரு தடவைகள் ஜனாதிபதியாகவும் ஒரு தடவை பிரதமராகவும் பதவி வகித்துவிட்டார். அவர் நான் செய்ததைப் போலவே ராஜினாமா செய்ய வேண்டும்" என்றார். 20 வருடங்களுக்குமுன் - 25.12.1991 ஆம் திகதி சோவியத் யூனியனின் ஜனாதிபதி பதவியிலிருந்து கொர்பசேவ் ராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்கொரிய உளவுப்படைக்கு தண்ணி காட்டும் வடகொரியா



(சியோல்)

வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் இல்லின் மரணத்திற்குப் பின், தென்கொரியா உளவு பார்த்து வருவதால், அதைத் தடுக்கும் வகையில், தகவல் பரிமாற்றங்களில் ரகசிய குறியீடுகளை, வடகொரியா மாற்றியுள்ளது.

வடகொரிய தலைவர் கிம் ஜாங் இல் மறைந்த பின், அந்நாட்டில் நடக்கும் அரசியல் மாற்றங்கள் குறித்து அறிந்து கொள்ள, தென் கொரியா அதிக ஆர்வம் காட்டி வருகிறது. அதற்காக, தென் கொரிய உளவுத் துறை முடுக்கி விடப்பட்டுள்ளது. கிம் ஜாங் இல் மரணம் அடைந்த செய்தி கூட உடனடியாக, வெளியுலகுக்குத் தெரிந்து விடாதபடி, வடகொரியாவின் உளவுத்துறை செயற்பட்டதைக் கண்டு, தென் கொரியா அதிர்ச்சியில் உறைந்திருந்தது. அதன்பின் தான், தென் கொரிய உளவுத் துறை, வடகொரியாவை உளவு பார்ப்பதில் அதிக வேகம் காட்டி வருகிறது.

மேலும், கிம் ஜாங் இல் இறந்த உடன், பல்வேறு இடங்களில் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த இராணுவத்தினரை உடனடியாக, பயிற்சிகளைக் கைவிட்டு தங்கள் தளங்களுக்குத் திரும்பும்படி, புதிய தலைவர் கிம் ஜாங் உன் முதன் முதலாக உத்தரவு பிறப்பித்ததாக, தென் கொரிய ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன. இந்த உத்தரவு ரகசிய குறியீடுகளாக, கம்பியில்லா தந்திகள் மூலம் இராணுவத்தினருக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்தக் குறியீடுகளை, தென் கொரிய இராணுவம் கண்டுபிடித்து, தகவலை அறிந்து கொண்ட பின் தான், தென் கொரிய ஊடகங்களில் கிம் ஜாங் உன்னின் முதல் உத்தரவு பற்றிய தகவல்கள் வெளிவந்தன. இதையடுத்து, தற்போது வடகொரியா தனது உளவு மற்றும் இராணுவத் தகவல்களுக்கான ரகசியக் குறியீடுகளை மாற்றி அமைத்துள்ளது. இதனால், தென் கொரியா உளவு பார்ப்பதில், மேலும் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வாடகைக்கு கிடைக்கும்

(லண்டன்)

அரச குடும்பப் பராமரிப்புகளுக்கான செலவுகளில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுகட்டும் நோக்கில், கென்ஸிங்டன் அரண்மனையின் பூங்காவை ரஷியாவின் ஒலிம்பிக் குழுவுக்கு வாடகைக்கு விடவுள்ளார் இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத். இங்கிலாந்து அரச குடும்பத்துக்கு வழங்கப்படும் நிதியுதவியில் 14 சதவீதத்தை 2013-ஆம் ஆண்டிலிருந்து குறைக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

2012ஆம் வருடம் ஜூலை மாதம் கோடைக்கால ஒலிம்பிக் போட்டி இந்தப் பூங்காவிலேயே நடைபெறவுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்கான தொகை எவ்வளவு என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆனால் இதற்கான முன்வைப்புத் தொகை ரூ.20 கோடிக்கும் மேல் செலுத்தப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா ரஷிய கலாசார திருவிழாவைக் கொண்டாடும் வகையிலும் மாற்றியமைக்கப்படும். மேடைகள், பூங்காக்கள், தங்குமிடங்கள் ஆகியவை இங்கு அமைக்கப்படும். முக்கியப் பிரமுகர்கள் வந்து செல்வதற்கான நுழைவாயிலும் அமைக்கப்படும்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆங்கில மொழியில் கணினி வியாபாரக்கற்கைகள், கணக்கியல் மற்றும் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உடையவர்கள் எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையை principal, st johns, college, Jaffna என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கிறில் கேற் வேலை செய்யக்கூடிய எலக்றிக்கல் வெல்டர் வேலை பழக விரும்புபவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0773760594 இற்கு தொடர்பு கொள்ளவும்.

புதிதாக திறக்கப்படும் மருந்தகத்திற்கு தகுதி பெற்ற மருந்தாளர் மருந்துகள் பற்றிய அனுபவமுள்ள ஒரு உதவியாளர் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் 31.12.2011இற்கு முன்னதாக 0777526066 அல்லது Sujanthan 7@gmail.com என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

ANDRA Digial Image நிறுவனத்தில் உதவிக்கணக்காளர், நிர்வாக உத்தியோகஸ்தர், வரவேற்பாளர், எழுது வினைஞர், கணினியில் வடிவமைப்பாளர், தட்டச்சாளர் (கணினி), சிற்றூழியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று முற்பகல் 9.00 மணி தொடக்கம் 1.00 வரை நடைபெறவுள்ள நேர்முகத்தேர்விற்கு சுயவிபரங்களுடன் 379/167, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சமூகந் தரவும் மேலதிக விபரங்களுக்கு 0217201264, 0776622981 இற்கு தொடர்பு கொள்ளவும்.

பெண்களுக்கான ஆடை தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் வேலைக்கு தேவை ஆர்வமுள்ளவர்கள் 0779116004 இற்கு தொடர்பு கொள்ளவும்.

அமுல் கிறீம் ஹவுஸ் இல் குசினி வேலைகள் மற்றும் பரிமாறுபவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 452, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

Tilko Jaffna City Hotel இல் F&B Manager House Kccper பிர தான கணக்காளர், கட்டட பராமரிப்பு உத்தியோகஸ்தர், தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையை gm@cityhotel Jaffna.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது General Manager tilko Jaffna city Hotel,70/6,k.k.s Road Jaffna என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

HDFC Bank இல் வியாபார மேம்படுத்தல் பயிலுநர்களுக்கான ஆட்சேர்ப்பு O/L இல் கணிதம் மற்றும் மொழிப்பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தி, A/L இல் 3 பாடங்களில் சித்தி, கணிஅறிவு மற்றும் 24 வயதிற்கு உட்பட்ட ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 6 நாட்களுக்குள் சுயவிபரக் கோவையை தலைவர் (மனித வளம்) இலங்கை HDFC வங்கி, தபால் பெட்டி இல 2085 சேர் சித்தம்பலம் ஏ.காடினர் மாவத்தை கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செல்வந்த வீடுகளுக்கு பெண் உதவியாளர்கள் உடன்தேவை. பாதுகாப்பான இடத்தில் வேலையும் 20 000ரூபா சம்பளமும் வழங்கப்படும் ஆர்வமுள்ளவர்கள் 0779296986 இற்கு தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு 25-40 வயதிற்கு உட்பட்ட பணிப்பெண்தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0756779545 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் பணியாளர், வாகன திருத்துனர்கள், வெளிக்கள தொழில் நுட்பவியலாளர்கள் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உடையவர்கள் எதிர்வரும் 9 நாட்களுக்குள் சுயவிபரக் கோவையை the General Manager Abans Auto 212 Negombo Road Peliyagodaஅல்லது Careers-auto @ abansgroup.com என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் கட்டடநிர்மாண வேலைத்தளங்களில் Site engineers, Technical officers Supervisors. Quantity Surveyors. பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், மேசன தச்சுத்தொழிலாளர்கள், மின் இணைப்பாளர்கள், நீர்க்குழாய் பொருத்துநர்கள், கட்டட சிற்ப பணியாளர்கள் தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் 27.12.2011, 29.12.2011ஆகிய தினங்களில் பிற்பகல் 1 மணியில் இருந்து 5 மணிவரை V.V.இராமநாதன் அன்ட் கொம்பனி வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியா, அல்லது 23, நல்லூர் குறுக்கு வீதி யாழ்ப்பாணம், எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

உணவு கையாளும் உற்பத்தி குளிர்பான தயாரிப்புக்கு ஆண், பெண் ஆகிய இருபாலாரும் வேலைக்கு ஆட்சேர்ப்பு. இன்று காலை 9 மணிமுதல் இராசபாதை வீதியில் சிறுப்பிட்டி மேற்கு ஞான வைரவர் ஆலயத்துக்கு அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் சமூகந் தரவும், மேலதிக விபரங்களுக்கு 0779594326 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கணக்கு வேலை தெரிந்த சிங்களம் பேசக்கூடியவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0771807672இற்கு தொடர்பு கொள்ளவும்.

திறமையுள்ள சலூன் தொழிலாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0752223463, 0752223463 இற்கு தொடர்பு கொள்ளவும்.

Vedio editing செய்வதற்கு மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ளவர்கள் தேவை. அர்வமுள்ளவர்கள் 0756411861 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# அள்ளிச் செல்லப்படும் கடல்வளம் வெறும் கையுடன் வடக்கு மீனவர்கள்

இந்திய மீனவர்களின் றோலர் படகினால் நாம் மீன்பிடிக்க முடியாமல் வெறுங்கையுடனேயே வீடுதிரும்புகின்றோம். வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி வடக்கு கொட்டடி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஆர். கண்ணன் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்:

14 கடற்தொழில் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களைத்திரட்டி ஒரு அகிம்சை வழியான போராட்டம் ஒன்றை நடாத்தி எமது பிரச்சினைகளை உலகிற்கு வெளிப்படுத்துவதற்காக இந்தியத் தூதரகம் மற்றும் யாழ். அரச அதிபருக்கும் மகஜர் ஒன்றைக் கையளிக்கத் திட்டமிட்டு இருந்தோம். இதனை பொலிஸாரின் அனுமதி பெற்று சட்ட ரீதியான முறையிலேயே செய்ய இருந்தோம். ஆனால் இறுதி நேரத்தில் அதுகைவிடப்பட்டது.

சங்கங்களின் தலைவர், செயலாளர் மட்டும் சென்று இவ் மகஜரைக் கையளித்தோம்.

மேலும் எமது மீனவ இளைஞர்களால் அத்துமீறி எமது கடற்கரைப் பகுதியில் உள்நுழைந்து இந்திய மீனவர்களை விரட்டி அடித்ததுடன் மீனவர்கள் சிலரைப் பிடித்தோம்.

போர் முடிவடைந்து விட்டது எனக் கூறி எமது நிவாரணங்களையும் அரசு நிறுத்தியுள்ளது. எமது நாட்டில் கடற்பகுதியில் பயன்படுத்த முடியாத தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் தொழில் மேற்கொள்கின்றனர்.


மீன்களின் வங்கி என இலங்கையர்களால் வர்ணிக்கப்படும் வடக்குப் பிரதேசத்தில் இவ்வாறான அத்துமீறல்களால் நாம் வெறுங்கையுடனேயே கடலிலிருந்து திரும்புகின்றோம்.

இது எந்த வகையில் நியாயம் என்பதனை அனைவருக்கும் உணர்த்த விரும்புகின்றேம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதற்கு யார் முன்வருவார்கள் என்று ஆதங்கத்துடன் கடற்தொழில் சங்கங்கள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# புதையல் தோண்டும் முயற்சி 8பேர் பொலிஸாரால் கைது

புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் நவகத்தேகம பிரதேசத்தில் 8 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நவகத்தேகம பலுகஸ்வெவ பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, மின்னேரியா, மீறிகம, அம்பன்பொல மற்றும் நாரம்மல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் நேற்று புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பபட்டனர்.



நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவு முன்றலில் அமைக்கப்பட்டுள்ள நத்தார் பந்தலின் அழகுத்தோற்றத்தைக் காணலாம். (பா.சிகான்)

# மின்சாரம் தாக்கி மூவர் ஸ்தலத்தில் பலி

மத்துரட்ட - ஒக்கந்தவெல பாடசாலைக்கு அருகில் உள்ள வீடொன்றில் வசிக்கும் மூவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு 09.25 அளவில் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். வீட்டுக்கு அருகில் 25 மீற்றர் தொலைவில் இருந்த அநாவசிய மின் இணைப்புக் கம்பியில் சிக்குண்டே இவர்கள் உயிரிழந்துள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை (வயது- 44), தாய் (வயது- 33) மற்றும் ஆண் குழந்தை (வயது- 03) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

# வன்னியில் வீதிவிபத்து இருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை வீதியில் சேறு ஏற்றிச் சென்ற டிரக் வண்டியில் பயணித்த நபர ஒருவர் அதிலிருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற இவ்விபத்தில் 30 வயதுடைய ஜோசப் ரொபின்ஸன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் டிரக் வண்டியின் சாரதியை கைது செய்துள்ள முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை, கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதியின் பன்னங்கண்டி பாலத்திற்கு அருகில் வட்டக்கச்சியில் இருந்து கிளிநொச்சி சென்ற பஸ்ஸில் துவிச்சக்கர வண்டி மோதி இடம்பெற்ற விபத்தில் 13 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற இவ்விபத்தில் 13 வயதுடைய பாக்கியநாதன் லக்சான் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

# போதைப்பொருள் கடத்தல் பாகிஸ்தான் பிரஜை கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக போதைப் பொருளை கடத்த முயன்ற பாகிஸ்தான் பிரஜை ஒருவ்ரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த பாகிஸ்தான் பிரஜை ஹெரோயின் போதைப் பொருளை நூதமான முறையில் சிறிய பொதிகளாக உருவாக்கி அவற்றை விழுங்கியிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபரான பாகிஸ்தான் பிரஜை நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் போதைப் பொருள் அடங்கிய பொதிகள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் 861 கிராம் எடையுடைய சுமார் 120 பொதிகளை குறித்த நபர் விழுங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வயிற்றுக்குள் பாரியளவு தொகை போதைப் பொருட்கள் மீட்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது.

# மட்டு.கடல் சீற்றம் மீனவர் இருவர் மாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்லடி முகத்துவாரத்தில் படகு கவிழ்ந்ததில் இருவர் காணாமல் போயுள்ளதுடன் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ரி.ஜோர்ஜ் தெரிவித்தார். மீன்பிடி நடவடிக்கைக்காக நேற்று முன்தினம் 3 பேர் மேற்படி படகில் பயணித்தபோது படகு முகத்துவாரம் ஆற்று வாடையை அண்மித்த நிலையில் கவிழ்ந்துள்ளது. இவர்களில் ஒருவர் அருகிலிருந்தவர்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்டுள்ளதுடன் ஏனைய இருவரையும் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு புன்னச்சோலையைச் சேர்ந்த சிறிதரன்(வயது-35), செல்வம்(வயது-40) ஆகிய மீனவர்களே காணாமல் போயுள்ளனர். சீரற்ற காலநிலை நிலவி வருவதால் கடலுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவித்திருந்த போதிலும் இம் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காருக்கு சேதம் ஐம்பது லட்சம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் குண்டு துளைக்காத Mercedes Benz காரின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது 5 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஐ.தே.க. கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தகவல் தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கிய பதவிகளுக்கான தேர்தல் அண்மையில் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் இடம்பெற்றது. இதன் போது ரணில் விக்கிரமசிங்க தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இதனையடுத்து அவருக்கு எதிராக கட்சியில் செயற்படுவோர், கட்சியின் தலைமையகம் மீது தாக்குதல்களை நடத்தினர். இதன்போதே ரணில் விக்கிரமசிங்கவின் குண்டுதுளைக்காத காருக்கு மேற்படி, சேதம் ஏற்பட்டது.

# உயர்கல்விக்கு புதிய பாடத்தெரிவு கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு

எதிர் காலத்தில் மாணவர்கள் உயர் தரத்தில் பாடப் பிரிவு ஒன்றைத் தெரிவு செய்வதற்காக புதிய பாடப் பிரிவுகள் உயர்தரத்தில் புதிதாகச் சேர்க்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனதெரிவித்தார். கொழும்பு டி. எஸ். சேனாநாயக்க மகா வித்தியாலயத்தில்இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தற்போதிருக்கும் வணிக, அறிவியல், கணித மற்றும் கலைப் பிரிவுகளுக்கு மேலதிகமாக 'தொழில் நுட்பம்' என்ற புதிய பாடப் பிரிவிலும் மாணவர்களுக்கு கல்வி கற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும். உயர் தரம் முடிந்தவுடன் வழங்கப்படும் பாடசாலை விடுகைப் பத்திரத்துக்குப் பதிலாக வாண்மைச் சான்றிதழ் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது .

அது போல சாதாரண தரப் பாடப் பரிந்துரைகளிலும் திருத்தம் செய்யப்படும். இந்தத் திருத்தங்கள் மாணவர்கள் முதன்மைப் பாடங்களுக்கு மேலதிகமாக உயர் தரத்தில் கற்கவிருக்கும் பாடமொன்றைத் தெரிவு செய்து சாதாரண தரத்திலிருந்தே அதனைப் படிப்பதற்கு இயலும் என்றார்.



புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான் பொது நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாசிப்பு மாத நிகழ்வில் தலைவர் மற்றும் விருந்தினர்கள் நிற்பதைக்காணலாம். (138)

# தொலைபேசிக் கட்டணம் செலுத்துவதற்கு வசதி

(கொழும்பு)

அனைத்து பிரதான ரயில் நிலையங்களிலும் தொலைத்தொடர்பாடல் நிலையங்களை ஸ்தாபிக்க அரசு திட்டமிடப்பட்டுள்ளது.எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார். ஸ்தாபிக்கப்படவுள்ள தொலைத்தொடர்பாடல் நிலையத்தின் மூலம் எந்தவொரு தொலைபேசிப் பட்டியலுக்குமான கட்டணத்தை செலுத்தும் வசதி செய்து கொடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இந்தச் சேவை நிலையங்கள் ஊடாக தொலைபேசி, இணையத்தள தொடர்பாடல் சேவைகள், தபால், பிரதியாக்கம் உள்ளிட்ட நவீன அத்தியாவசிய தொலைத தொடர்பாடல் வசதிகளை பயணிகளுக்கு பெற்றுக்கொடுக்க எண்ணியுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் மேலும் தெரிவிக்கிறார். அத்துடன் தொலைபேசி, மின்சாரம், உள்ளிட்ட ஏனைய பட்டியல்களுக்கான கட்டணங்கள் இந்தத் தொலைத் தொடர்பாடல் நிலையங்களின் ஊடாக செலுத்தக்கூடிய வசதிகளை பயணிகளுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# செய்வதை சரியாகச் செய்தால் எதற்கும் அஞ்சத் தேவையில்லை

## யாழ். மாநகர முதல்வர்



(யாழ்ப்பாணம்)

நாம் செய்வதைச் சரியாகத் துணிந்து செய்தால் எதிர்க்கும் அஞ்சத் தேவையில்லை என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். யாழ். மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் இடம் பெற்ற பலாலி ஆசிரிய கல்லூரி யின் வருடாந்த கலாவதி சஞ்சிகை வெளியீடு மற்றும் ஒளிவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் நடக்காததை நடந்து என்று கூறு வது எமக்கு சாபக்கேடாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் கலாச்சாரம் மாற்றுகின்ற சாபக்கேடு எமக்கு மத்தியில் உலாவிவருகின்றது. இதனைத் தடுக்கவேண்டும். சரியென்று நினைப்பதைப் பிழையென்று நினைக்கின்ற எமது சமூகத்தில் சாதாரண தொண்டுகள் புரிந்தவர்கள் அரசி யல் தொண்டு புரிந்தவர்கள் பல வேறு சவால்களை எதிர்கொள் கின்றனர்.

நாங்கள் நொந்துபோய் பல இழப்புகளுக்கு மத்தியில் தற்போது ஜனநாயக சூழலில் வாழ்ந்துவருகின்றோம். இந்த ஜனநாயக சூழலை அழிப்பதற் குச் சிலர் திட்டமிட்டு வருகின்ற னர். எமது குறைகளை நிவர்த்தி செய்யவரும் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி உரிமை களைப் பெறவேண்டும்.

தவறான வழிநடத்தல் தவறான அரசியல் தலைமைகள் எம்மை பிழையான பாதையில் இட்டுச் சென்றமையினால் இன்றைய இக்கட்டான நிலைமைக்குத் தள் ளப்பட்டுள்ளோம். நாம் பல்வேறு விழுமியங்கள் பண்பாடுகளைக் கொண்ட கல்விச் சமுதாயம் எனவே எமக்குக் கிடைத்தவற்றை நேரிய சிந்தனையுடன் பெறவேண்டும். இதனூடாக எமது சமூகத்திற்குத் தேவையானவற்றைச் செய்ய வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கலாவதி சஞ்சி கைத் தொகுப்பாளர் ஆசிரிய மாணவன் இராமர் முரளிதரன் கலாசாலை அதிபர் ம.இக்னேசி யஸ், கலாசாலையின் முன்னாள் உபஅதிபர் சி.கருணாமூர்த்தி, கமால் பள்ளிவாசல் மௌலவி எஸ்.ஏ.சி. றொசான், யாழ். எகட்ஹிதாஸ் பணிப்பாளர் வணபிதா ஜே.கே. பேணாட் றெக்னோ ஆகியோரும் கலந்துகொண்டனர். (எப்.எஸ்)

# சிங்கள மொழிப் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களுக்குச் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களில் சிங்கள மொழிவிருத்திப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணானந்தன் தலைமையில் கடந்த 24 ஆம் திகதி இந்நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் 76 பேர் 11 நாட்கள் இடம்பெற்ற இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டனர். ஆகியோரின் விரிவுரைகளுடனும் ஒளிப்படக் காட்சிகளுடனும் சிங்களமொழிப் பயற்சி வகுப்பு நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநரின் பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலட்சுமி, தேசிய மொழி கல்வி பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஆர் கேரத் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கிவைத்தனர். (எஸ்)

### பெறுபேறுகள்...

இதன் காரணமாக மாணவர கள் பெருமளவில் பாதிக்கப்பட் டுள்ளனர் என சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோஸப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். நேற்றுக் காலை பத்து மணிக்கு பரீட்சை பெறு பேறுகள் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் அநுர எதிரி சிங்க தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வாறு வெளியிடப்பட வில்லை. திட்டமிட்ட செயற் பாடுகள் இன்மையே இதற்குக் காரணம் எனவும் ஜோஸப் ஸ்டா லின் தெரிவித்துள்ளார்.

# இலங்கை நிர்வாகசேவைக்கு தெரிவானோர் விபரம் வெளியீடு

இலங்கை நிர்வாகசேவைக்குப் பரீட்சை மூலம் நியமனம் செய்ய தகுதியானவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வருடம் இலங்கை நிர்வாகசேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கும், திறந்த போட்டிப்பரீட்சைக்கும் தோற்றித் தெரிவான வர்களுக்கான வாய் மூலமான பரீட்சை கொழும்பில் அண்மையில் நடைபெற்றிருந்தது.

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமனத்திற் குத் தகுதியானவர்களின் பெயர் விபரங்கள் பொதுநிர்வாக சேவை திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலத்தில் தெரிவுசெய்யப்பட்டு வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் இருந்து அண் ணளவாக பாதிப்பேர் வரையானோர் நியமனத்திற்குத் தெரிவா கியுள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் பெறுப வர்களின் விபரங்கள் கடந்த புதன் கிழமையும், திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றித் தெரிவாகி நியமனம் பெறுபவர்களின் பெயர் விபரங்கள் கடந்த வியாழக்கிழமையும் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மிகவிரைவாக அனுப்பி வைக்கப்படும் என்றும் இவர்களுக்கான ஆறுமாதப் பயிற்சி கொழும் பில் அடுத்தவருடம் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (23)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் இருமாடிக் கட்டட நோயாளர் விடுதி

(சாவகச்சேரி)

பின்லாந்து மற்றும் தைரிஸ் செஞ சிலுவைச் சங்கத்தினால் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலை யில் 2 மாடி கொண்ட இரு விடுதிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

154 மில்லியன் ரூபா செலவில நோயாளர் விடுதியும், உத்தியோ கத்தர் விடுதியும் நிர்மாணிக்கப் பட்டு வைத்தியசாலை நிர்வாகத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங் கம் தலைமையில் நடைபெற்ற இந நிகழ்வில் பின்லாந்து செஞ்சிலு வைச் சங்க செயலாளர் நாயகம் செல்வி கிறிஸ்ரீனா தைரிஸ் செஞ சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி சுகஞ்சனா ஆகியோரால் விடுதிக ளுக்கான திறப்புக் கையளிக்கப் பட்டது.

# மாலைதீவு ஜனாதிபதி இன்று இலங்கை வருகிறார்

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நசீட் இன்று இலங்கை வரவுள்ளார். இராணு வப் பயிற்சி அதிகாரிகளின் பிரியாவிடை நிகழ்வொன்றில் பிரதான அழைப்பாளராகக் கலந்துகொள்ளவென அவர் இலங்கை வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. தியத்தலாவை இராணுவ பயிற்சிக் கல்லூரி இராணுவ பயிற்சிபெற்றவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நசீட் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது. தனது இந்த விஜயத்தின் போது இலங்கை அமைச்சர்கள் சிலரை மாலைதீவு ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடு வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மாகாண சபைகளின்...

கொள்கையை முன்னெடுத்துச் செல்வது, அனைத்து அலுவலங்களிலும் தமிழ்பேசும் அதிகாரிகளை நியமிப்பது, உயர்பாதுகாப்பு வலையங்களை குறைப்பது, இராணுவத்தினரிடமுள்ள தனியார் காணி களை திரும்ப ஒப்படைப்பது, வட மாகாணத்தில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் கொண்டுவருவது போன்றவை தொடர்பில் எடுக்கப்பட திட்டமிடப்படும் நடவடிக்கைகள் குறித்த விபரங்களை இந்தியா கவனத்தில் எடுத்துள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பாக இலங்கை கொடுத்துள்ள வாக்குறுதிகளை விரைவாக நிறை வேற்றுவதும், பொதுமக்கள் தமது இயல்பான வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஒரு முக்கியமான முன்னேற்றமாக இருக்கும்.

இலங்கையில் ஏற்பட்ட மோதல்களுக்கு அடிப்படையாக இருந்த காரணங்களை அரசு உணர்ந்து கொண்டு அதற்கு தீர்வுகாணும் வகையில், ஒரு அரசியல் தீர்வின் மூலம் ஒருமித்த கருத்துடன் கூடிய நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை முன்னர் பலமுறை இந்தியாவுக்கு வாக்குறுதிகளை அளித் துள்ளது என்றாலும், அர்த்தமுள்ள வகையிலான அதிகாரப் பகிர்வு, உண்மையான நல்லிணக்கத்துக்கும் வழிவகுக்கும் என்பதை இலங்கை அரசு உணர்ந்து உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்று தாங்கள் நம்புவதாகவும் இந்தியா கூறியுள்ளது. அப்படியான ஒரு இணக்கப்பாட்டை நோக்கி இலங்கை செல்வதற்கு இந்தியா தொடர்ந்து தனது ஆதரவை வழங்கும் எனவும் இந்திய வெளியுறவு அமைச் சகத்தின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### ஊடகவியலாளர்கள்...

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு விவகார அதிகாரி ஜேம்ஸ் மூர் இந்தத் தகவல்களை அனுப்பிவைத்துள்ளார்.

புலிகளுடன் தொடர்புகளைப் பேணிவரும் ஊடகவியலாளர்கள் பற்றிய தகவல்கள் கிடைக் கப் பெற்றுள்ளதாக இராணுவத் தளபதியும், பொலிஸ் மா அதிபரும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களிடமி ருந்து இவ்வாறான ஊடகவிய லாளர்கள் பற்றிய பட்டியல் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதில் அநேக மானவர்கள் சிங்களவர்கள் என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

சிலர் புலிகளுடன் இரகசிய சந்திப்புக்களை பேணியதாக குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறானவர் களுக்கு தண்டனை வழங்கப்படும் எனவும் இராணுவத் தளபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். பல ஊடகவியலாளர்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வெளிநாட்டுத் தூதரகங்களிடம் கோரிக்கை விடுத்துவருவதாக ஜேம்ஸ் மூர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற ஊழல் சம்பவமொன்று குறித்த செய்தி சேகரிப்பில் ஈடு பட்ட சண்டே லீடர் ஊடகவியலாளருவான் பெத்தியேகொட அண்மையில் தூதரகத்தின் உத வியை நாடியதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சண்டே லீடர் பிரதம ஆசிரியர் லசந்தவிற்கு நெருக்கமானருவான், அவுஸ்ரேலிய, இலங்கை இரட்டைக் குடியுரிமை உடையவர் என மூர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்ரேலிய உயர்ஸ்தானி காராலயத்திற்கும் இந்த விடயம் குறித்து தகவல் வழங்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்ரேலிய உயர்ஸ் தானிகராலய அதிகாரிருவான் நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல தேவையான உதவிகளை வழங்கியதுடன், விமான நிலையம் வரையில் கொண்டு சேர்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

### உள்ளூர்வாசிகள்...

சேர்ந்த குரும்ஷேக் என்ற செஞ்சிலுவைச்சங்க தொண்டர் சேவை யாளரே கொலை செய்யப்பட்டவராவார்.

உள்ளூர்வாசிகள் சிலர் மது அருந்திவிட்டு மோதலில் ஈடுபட்ட தாகவும், அதை தடுக்கப்போன வெளிநாட்டு வாசி மீது உள்ளூர் வாசிகள் தாக்குதலை நடத்திய தாகவும் பொலிஸார் தெரிவித்த னர். இதேவேளை, வெளிநாட்டவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற் கொண்டுவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் மற்றும் ஏனைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வும் அவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் தங்காலை பிரதேசசபை தலைவர் சம்பத் சந்து புஷ்ப உட்பட அவ ரது ஆதரவாளர்கள் சிலரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்

### மதிய உணவு...

தனது சகோதரிக்கு நேற்று நண்பகல் மதிய உணவு கொண்டு சென்ற இச்சிறுவன், தனது சகோதரியிடம் போய்ச்சேரவில்லை என்பதுடன், அவர் தொடர்பான எந்தத் தகவலும் கிடைக்கவில்லை யெனவும் தாயார் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவர் வழமையாகவே தனது சகோதரிக்கு மதிய உணவு கொண்டுசெல்பவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம் பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எப்.எஸ்)

### வடக்கு, கிழக்கு...

ஆதரவளிப்பதா அல்லது மாறுபட்ட கருத்துக்களை வெளியிடு வதா என்பது நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் பின்னர் தீர்மானிக்கப் படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங் களுக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ஏற்கனவே உறுதியளித் துள்ளதாக, நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு வழங்கப்படாத நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் எவ்வாறான உறவுகளை பேணுவது என்ப தனை கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கரு ஜயசூரிய, ரவி கருணாநாயக்க மீண்டும் ஐ.தே.க. செயற்குழுவில்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோரை மீண்டும் உள்வாங்க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

கட்சித் தலைவருக்கு உள்ள உத்தியோகபூர்வ அதிகாரத்தின் அடிப்படையில், மத்திய செயற்குழுவின் 20 பேருக்கான நியமனங்களின் ஒரு கட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தநிலையில், எதிர்கட்சித் தலைவரின் உறுப்பினர் நியமன அதிகாரத்தின் கீழ் இதுவரை 16 பேர் மத்திய செயற்குழுவுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற முக்கிய உறுப்பினர் தெரிவுக்கான தேர்தலில் பிரதித் தலைவர் மற்றும் தேசிய அமைப்பாளருக்கான பதவிகள் கிடைக்காததன் காரணமாக மத்திய செயற்குழு உறுப்பினர் உரிமையையும் அவர்கள் இழக்க நேர்ந்தது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் வாரம் இடம்பெறும் 2012 ஆம் ஆண்டுக்கான முதலாவது மத்திய செயற்குழு கூட்டத்தில் கரு ஜயசூரிய மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

# சிறுமி மீது வல்லுறவு கைதான வயோதிபர் மரணம்

(கொழும்பு)

சிறுமி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய 63 வயதான நபர் ஒருவர் பொலிஸ் தடுப்பிலிருந்த போது உயிரிழந்துள்ளார். இந்த மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மிகவும் குறைந்த வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் எம்பிலிப்பிட்டிய செவனகல பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதான நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் அவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து நோய் வாய்ப்பட்டதனையடுத்து செவனகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார்.

# காலாவதியான விசா வைத்திருந்த இலங்கையர் தமிழகத்தில் கைது

(திருவானந்தபுரம்)

சுற்றுலா விசா காலாவதியாகியும் சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் தங்கியிருந்த இலங்கைப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருவானந்தபுரம் கோவலம் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


மொஹமட் ஹசிம் (வயது - 34) என்பவர் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி இலங்கையில் இருந்து சென்னைக்குச் சென்றுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட சுற்றுலா விசா கடந்த ஜூன் 9 ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது.

குறித்த இலங்கையர் கடந்த வியாழக்கிழமை சென்னையில் இருந்து திருவானந்தபுரம் - கோவலம் சென்று தன்னை புனே நபர் என அறிமுகப்படுத்தி ஹோட்டலில் தங்க முயற்சித்துள்ளார்.

இவருடைய போலியான இந்தத் தகவல் குறித்து ஹோட்டல் உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் அங்கு விரைந்த பொலிஸார் குறித்த இலங்கையரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

# வடக்கு, கிழக்கு பாடசாலைகளுக்கு கொரியா 228 மில்லியன் உதவி



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக கொரியா உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. ஆசிரியர் பயிற்சி மற்றும் பாடசாலை நிர்வாக முகாமை பயிற்சி ஆகியவற்றுக்காக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் ஊடாக கொரியா இந்த உதவிகளை வழங்கவுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளை விருத்தி செய்வதற்காக கொரியா 228 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கவுள்ளது.

வடக்கு, கிழக்கின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவி வழங்கப்படுவதாக கொரிய உதவி நிறுவன்ம் அறிவித்துள்ளது.

கற்பித்தல் தரம் மற்றும் பாடசால்ல நிர்வாகம் ஆகியவற்றினை மேம்படுத்துவுதன் மூலம் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு விசா பெறுவதற்கு போலி ஆவணம் வழங்கிய குழு கைது

(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்காக, இலங்கையர்களுக்கு போலி உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கிவந்த குழுவொன்றை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இக்குழுவினர் கடந்த ஒரு வருட காலத்திற்கு மேலாக பல்வேறு அரச நிறுவனங்களின் போலி முத்திரை பதிக்கப்பட்ட ஆவணங்கள் பலவற்றை விநியோகித்து வந்ததாகவும் இதற்காக விண்ணப்பதாரிகளிடமிருந்து தலா 114,000 ரூபாவை அறவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டுத் தூதரகத்திற்கு தம்பதியொன்று சமர்ப்பித்த சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் குறித்து விசாரிப்பதற்கு அத் தூதரகம் புலனாய்வு அதிகாரிகளை நாடிய போது இவ்விவகாரம் அம்பலத்திற்கு வந்தது.

கடந்த ஒரு வருடகாலத்திற்கு மேலாக பலர் மேற்படி ஆவணங்களை சமர்ப்பித்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விசா பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகள் தெரிவித்தனர். பெரும்பாலான விண்ணப்பதாரிகள் வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் எனவும் அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இக்குழுவுக்கும் ஏனைய குழுவினருக்கும் உள்ள வித்தியாசமானது அவர்கள் செயற்படும் விதமாகும். விண்ணப்பதாரிகள் இக்குழுவிடம் பணத்தைச் செலுத்தினால் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதுவரை அனைத்து நடவடிக்கைகளையும் இந்த குழுவே மேற்கொண்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக்குழுவுக்கு தரகராக செயற்பட்டு வந்த பன்னிபிட்டியவை சேர்ந்த ஒருவரிடம் தெல்கொடவைச் சேர்ந்த மேற்படி தம்பதி 114,000 ரூபாவை வழங்கியதாக ஒப்புக்கொண்டுள்ளது.

அத்தரகரைத் தேடி பொரலஸ் கமுவவிலுள்ள வீடொன்றுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சென்றனர். அங்கு இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பிரதான நபரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்தனர்.

விசா பெறுவதற்கு விண்ணப்பித்திருந்த 9 பேரின் ஆவணங்கள், தேசிய அடையாள அட்டைகள், பல்வேறு அரச நிறுவனங்களின் 92 இறப்பர் முத்திரைகள் ஆகியவற்றையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

# பொன்சேகாவை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்



(கொழும்பு)

அரசாங்கம் எந்த நிபந்தனையுமின்றி, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவை விடுதலை செய்ய வேண்டும் என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேக்கா எவரது கோரிக்கைக்கு அமைய மன்னிப்பு பெறவேண்டிய ஒருவர் அல்ல எனவும் அவர் கூறியுள்ளார். மன்னிப்பு பெற சரத் பொன் சேகா என்ன தவறு செய்துள்ளார்? அவரை கடத்திச் சென்றது ஒரு தலைபட்சமான, ஜனநாயக விரோத செயற்பாடு எனவும் அவரை அரசாங்கம் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் எனவும் ஹந்துன் நெத்தி கூறியுள்ளார்.

சட்டத்திற்கு அப்பால், நீதி, தர்மம் என்ற ஒன்று உள்ளது. நீதியையும், தர்மத்தையும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் ஜனநாயகத்திற்கு விரோதமாக கடத்திச் சென்று, அரசியலில் ஈடுபட்டமைக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள சரத் பொன் சேகாவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் நிலையங்களிலுள்ள வெடிபொருட்கள் அகற்றல்

(கொழும்பு)

நாடெங்கிலுமுள்ள பொலிஸ் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களை அங்கிருந்து அகற்றுவது என்று பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. மாவட்ட மட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள களஞ்சியசாலைகளில் வெடிபொருட்களை வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டதனையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெடிபொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு இலங்கையின் மாவட்டங்களில் ஒன்பது மாவட்டங்கள் தற்போது இனங்காணப்பட்டுள்ளன.

இந்த ஒன்பது மாவட்டங்களிலும் 11 வெடிபொருள் களஞ்சியங்கள் நிறுவப்பட்டு அங்கு வெடிபொருட்கள் களஞ்சியப்படுத்தப்படவுள்ளன.

# சிறிகொத்த தாக்குதல் பிழையான முன்னுதாரணம்

(கொழும்பு)

சிறிகொத்த மீதான தாக்குதல் சம்பவம் ஓர் பிழையான முன்னுதாரணம் என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.


கட்சி முரண்பாடுகளைக் தீர்க்க முடியாத நிலையில் எவ்வாறு நாட்டை ஆட்சி செய்ய முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆட்சி அதிகாரம் கிடைக்கப் பெற்றால் என்ன நேரும் என்பதனையே சிறிகொத்த சம்பவம் எடுத்துரைக்கிறது.

கட்சித் தலைமையகம் மீது தாக்குதல் நடத்துமாறு தமது ஆதரவாளர்களை வழிநடத்தும் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கின்றனர்.

கட்சி உறுப்பினர்களும் தலைவர்களும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறான ஓர் கட்சிக்கு அதிகாரத்தை வழங்குவதற்கு முன்னர் மக்கள் இரண்டு தடவை சிந்திப்பார்கள்.

பெரும் அச்சுறுத்தலாகத் திகழ்ந்த கரு ஜயசூரியவை, சஜித் பிரேமதாச மிகவும் சூசகமாக ஓரங்கட்டி விட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# 25 ஆயிரம் தாதியர் பற்றாக்குறை; சுகாதார அமைச்சர் தகவல்

(கொழும்பு)

நாட்டின் சுகாதாரத் தேவைகளுக்கு அமைய மேலும் 25 ஆயிரம் மருத்துவ தாதியர்கள் அவசியம் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவை பிரதேசத்தில், நிர்மாணிக்கப்பட்ட திறந்த பல்கலைக்கழகத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியாக உள்ள மருத்துவ மனைகளில் 15 ஆயிரம் மருத்துவர்களும், 25 ஆயிரம் மருத்துவ தாதியர்களும் கடமையாற்றுகின்றனர்.



இந்த நிலையில், இவர்களுக்கு மேலதிகமாக 25 ஆயிரம் மருத்துவ தாதியர்கள் தேவைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.